# திராவிடநாடு

2–7–61 | வார வெளியீடு | விலை 16 காசு

## "மறுமலர்ச்சி தோன்றிடாதோ?"

—[ புத்ததாசன் ]—

மாற்றலரின் தாளடிக்கு மண்டி யிட்டாய்!
 மானத்தை மணிமுடியைப் பறிகொடுத்தாய்!
ஆற்றலினை இழந்தவனே! உனக்கு அன்று
 அடிமையென வாழ்ந்தவனே வடபு லத்தான்!
நாற்றிடையே வளர்ந்துவரும் களையைப் போல,
 நம்மிடையே எட்டப்பர், இருப்ப தாலே;
வேற்றவரின் ஆட்சியிலே சிக்கி இன்று
 வேதனையால் வேல்தைத்த மான்போ லானாய்!

சீற்றமுறு! வடபுலத்தான் கரத்திற் சிக்கி
 செந்தமிழுந்தான் சீரழிகின்றது! செவிட னானாய்!
போற்றிடவே தமிழ்மொழி தன்னை என்றும்
 பொற் கரத்தில் பூட்டியுள்ள விலங்கொ டித்து
வீற்றிடுவாய் திருவிடத்தில் உரிமை பெற்று!
 வீழ்ந்தவனே, எழுந்திடடா வீரத் தோடு!
மாற்றிடுவாய், ஆட்சியினை அடிமை வாழ்வை
 மறுமலர்ச்சி தோன்றிடாதோ திராவிடத்தில்?

# நாம் ஆற்றி முடிப்போம்!

★

**கனகு**

அந்தப் பெருநகரில் அவன் சுற்றாத இடமில்லை. போய்ப் பார்க்காத பெரிய மனிதர் இல்லை. மூன்று நாட்கள் இப்படி அலைந்தான் அவன். மூன்று நாட்களும் தண்ணீர்தான் அவனுக்கு நல்லுணவு. மூன்று நாட்களும் மரத்தடிதான் அவன் உறங்குமிடம்; ஓயுமிடம்.

நாலாவது நாள் அவனால் நடக்க முடியவில்லை. இரவு தங்கிய அந்த மரத்தடியில் அப்படியே கிடந்தான். மூன்று நாட்களாகப் பட்டினியாகக் கிடந்து, கிடந்து சாமானியப் பசியைத் தாண்டிக்கொண்டு போய்விட்ட பெரும்பசியோ, பெருவிடாயோ—மனித உயிர்க்கு இறுதி வழிகாட்டும் இனம் புரியாத ஒன்று அவனை வாட்டி, வதைத்துப் பிழிந்தெடுத்துக்கொண்டிருந்தது. அவனால் எழ முடியவில்லை. எதையும் நன்றாகப் பார்க்க முடியவில்லை. குரல் எழுப்ப முடியவில்லை. கடைசியாகக் காலைவெயில் ஏற ஏற அவன் உணர்விழந்து போய்விட்டான். உணர்விழந்துவிட்ட அந்த நிலையிலும் அவன் போகுமிடம் எல்லாம் கையோடு சுமந்து கொண்டுபோன, இருக்குமிடம் எல்லாம் மடிமீதே வைத்துக்கொண்டிருந்த அந்தக் கனமான பையைக் கட்டித் தழுவித் கொண்டிருப்பதுபோல் கெட்டியாகப் பற்றிக்கொண்டே கிடந்தான்.

பொழுது ஏறிக்கொண்டிருந்தது. வெயிலின் வெம்மை எங்கெங்கும் தன் கடுந்தன்மையைக் காட்டிக் காட்டிச் சாடிக்கொண்டிருந்தது. அந்த மரத்தடி ஓரமாக யார்யாரோ காலை முதல் அயராது போய்க் கொண்டுதான் இருக்கிறார்கள், அங்கு, அந்த மூன்று நாட்பட்டினியை உற்று, உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றோர், சென்றோர் எத்துணையோபேர். அவருள் 'எவனோ ஒருவன், ஏனோ விழுந்துகிடக்கிறான்' என்று அவனை அசட்டையாகப் பார்த்து எண்ணிவிட்டுப் போனோர் பலர். 'ஐயோ, பாவம்! யாரென்று தெரியவில்லை. யாரென்று எழுப்பிக் கேட்கலாமா?' என்று மனத்துவரை எண்ணிவிட்டுப் போனார் சிலர். அவன் அருகிலே சென்று அவனை உற்று உற்று நோக்கியபின் 'ஏன் இப்படி இங்கே கிடக்கிறாய்?' என்று தொண்டைவரை கேட்டுவிட்டுப் போனோர் மிகச்சிலர். அவருள் 'ஏய் யாரங்கே? ஏன் படுத்துக் கிடக்கிறே?' என்று அதிகாரக் குரலில் கடாவிவிட்டுப் போனோரும் ஒருசிலர். இன்னும் அவன் கட்டித் தழுவிக் கொண்டுகிடக்கும் அந்தக் கனமான பைக்குள் 'ஏதேனும் பயனான பொருள் உள்ளதோ' என்று நலங்காமல், குலுங்காமல், ஆடாமல், அசையாமல் மிகமிகப் பதனமாக ஆராய்ந்து பார்த்துவிட்டுப் போனோரும் நாலைந்துபேர்.

மாலை நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. அந்த மரத்தோரமாகச் செல்வோரின் தொகையும் பெருகிக் கொண்டிருந்தது. அவ்வாறு அந்த வழியே அவ்வேளை சென்றோருள், காலையில் அதே வழியாகத் தத்தம் தொழில், அலுவல், உழைப்பு இன்னோரன்னவற்றிற்காகச் சென்று மீண்டுகொண்டிருந்தோர் பலர். அவருள் ஒருவன்தான் மாதவன்.

மாதவன் காலையிலேயே மரத்தடியில் வீழ்ந்துகிடப்போனை உற்று நோக்கிவிட்டுத்தான் போனான்—அவசர அவசரமாகத் தன் கடமையை எண்ணியவாறு ஓடியவண்ணமே. இப்போது அந்தமரத்தடியை நெருங்கியதும் காலையிற் கண்ட காட்சி தானாகவே அவன் மனக் கண்ணில் தோன்றியது. மரத்தை அணுகினான் அவன். காலையில் அங்கே எவ்வாறு ஒருவன் வீழ்ந்து கிடந்தானோ, அதே நிலையில்—அதே ஆள் — அங்கு கிடப்பதைக் கண்டான். தன் களைப்பையும், பசியையும் மறந்து அப்படியே. மரத்தடியில் சிறிதுநேரம் நின்றான்.

தெருவிளக்கு அவ்வேளை ஏற்றப்பட்டது. அவ்விளக்கொளியின் உதவியால் வீழ்ந்து கிடந்தவனின் முகத்தை நன்றாகக் காண முடிந்தது. அவன் பசியாற் களைத்துப் போய்க் கிடக்கிறான் என்பதை அவன் முகக்குறிகள் தெளிவாக எடுத்து விளம்பின.

அதேவேளை வீழ்ந்து கிடந்தவனும் கண்விழித்தான். மெல்ல மெல்ல, மருள மருள சுற்றும் முற்றும் பார்த்தான்.

மாதவனின் முகம் அந்தவேளை அந்தமூன்றுநாள்பட்டினிக்கு மிகவும் அறிமுகமான நெருங்கிய ஒருவனின் முகமாகத் தென்பட்டதோ, அல்லது அவனுடைய மனித உணர்வு மாதவனுகிய மனித உணர்வின் இயல்பாக ஒன்றுக்கு ஒன்று உதவுதல் செய்துகொள்ளவேண்டும் உணர்

வினை, எண்ணத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு முடிவு கட்டியதோ, அவன்—அந்த மூன்று நாள் பட்டினி தன் கையைஉயர்த்தி நான்கு விரல்களை மடித்து, பெருவிரலை நீட்டி வாயருகிற்கொண்டு போய்க்காட்டினான். அதாவது, தண்ணீர் வேண்டுமென்று கேட்டான். வாய் திறந்து அவ்வேளை பேசத்தான் முயன்றான் அவன். அது அவனால் முடியவில்லை.

வெறும் தண்ணீர் கொண்டுவந்து கொடுப்பதைவிட, அவ்வேளை வேறு ஏதாவது வாங்கிவந்து கொடுப்பது நல்லது என்று எண்ணினான் மாதவன். சட்டைப் பையைத் துழாவிப் பார்த்தான். அங்கே ஐந்துபுதுக் காசுகள் கிடந்தன. 'தேநீர்க்கு ஏழு காசுகள் வேண்டும்! வேறு என்ன வாங்கித்தரலாம்? சீக்கிரம் முடிவு கட்டவேண்டுமே!'

“சுக்குத் தண்ணீ! சுக்குத் தண்ணீ!”

அந்தக் குரல் அவ்வேளை மாதவனுக்கு இடர்போக்கும் பேருதவியாக அமைந்தது 'ஆமாம், சுக்கு நீர் ஐந்து காசுகள்தானே!'

“ஏ, சுக்குத் தண்ணீ!”

குவளை நிறையச் சுக்குநீரை வாங்கிப் படுத்துக்கிடந்தவனின் அருகிற் கொண்டுபோனான் மாதவன்.

படுத்துக்கிடந்தவனுக்கு அது கனவுக் காட்சியாகத் தோன்றியது. அவனும் கனவுச் செயலேபோல் எழுந்து அமர்ந்தான். தன் வலுவிழந்த கைகளால் குவளையை வாங்கிக்கொண்டான். மெல்ல மெல்லத்தான் அவன் பருகினான். அது—காய்ந்துபோன அவன் நாக்கிற் பட்டு, வறண்டுபோன தொண்டை வழியே இறங்கி, ஒட்டி உலர்ந்துபோன குடலை அடைவதற்குப் பெரும்பாடுபட்டது. அவனுக்குப் புரையேறிக்கொண்டது. அந்தப் புரையேறிய நிலையை மாற்றுவதற்கு வழி தோன்றாமல் மாதவன் பதறினான். துடித்துப்போனான். அது விரைவாகத், தானே அடங்கியது. திரும்பவும் மெல்ல மெல்லக் குவளையிலி நந்த சுக்கு நீர் முழுதையும் பருகிவிட்டான்.

ஓரளவு களைப்புத் தீர்ந்தாற்போல் தோன்றியது அந்த வீழ்ந்துகிடந்தவனுக்கு. சுற்றுமுற்றும் நன்றாகப் பார்த்தான். மாதவனை ஏற இறங்க நோக்கினான். “நீங்கள் செய்த இந்த உதவியை நான் என்றென்றும் மறக்கமாட்டேன்!” என்றுகைகளைக் குவித்து உயர்த்தியபடி மெல்லிய ஒலியில் மாதவனைப்பார்த்துக் கூறினான் அவன்.

“என்னோடு வருகின்றீர்களா?”

“எங்கே?”

“எங்கள் குப்பத்துக்குத்தான்!”

—“சரி” மெல்ல எழுந்தான் அவன். தட்டித் தடுமாறிக்கொண்டு நடந்தான். அவன் கையிலிருந்த பெரிய பையை மாதவன் வாங்கிக்கொண்டான்.

நகருக்குப் புறத்தேயுள்ள அந்தக் குடும்பம் நெருக்கமான சிறு சிறு குடிசில்களை உடையது. எங்கு பார்த்தாலும் சாக்கடை நீர். எங்கெங்கும் அதன் நாற்றம். அங்கே ஆடுகள் இருந்தன. மாடுகள் உலவின. நாய்கள், பன்றிகள் வாழ்ந்தன. அவற்றோடு மனித கூட்டமும் இரண்டறக் கலந்து வதிந்து கிடந்தது. அங்கே நடைபாதை என்றோ, புறக்கடை என்றோ, குடிசிலின் உட்புறம் என்றோ வேறுபாடு இல்லை. எல்லா இடங்களும், எல்லாராலும் எல்லாவற்றிற்கும் பயன்படுத்தப்பட்டு வந்தன.

மாதவன் அந்த அகதியைத் தன் குடிசிலிலுக்குள் அழைத்துச் சென்றான். அந்தச் சின்னக் குடிசிலுக்குள் குழந்தைகளும், முதியோருமாக ஏழெட்டுபேர் அடைந்து கிடந்தார்கள். அந்த நெருக்கடிக்கிடையே பின்னும் நெருக்கடியாக இந்த இரண்டுபேரும் உள்ளே நுழைந்துகொண்டார்கள். அந்த நெருக்கடியைக் குறைப்பதற்கு உள்ளேயிருந்த நாலைந்துபேர் வெளியே வந்தார்கள்.

நல்லவேளை, அன்று மாதவனின் குடிசிலில் கஞ்சி காய்ச்சப்பட்டிருந்தது. முதலில் அந்தக் கஞ்சியில் மூன்று குவளைக் கஞ்சியை எடுத்து அந்த மூன்று நாட் பட்டினிக்குக் கொடுத்தான் மாதவன். அந்த மூன்று குவளையும் அந்த மூன்று நாள் பட்டினிக்கு வயிறு கொள்ள, பசியாற உண்ணப் போதாததுதான். என்றாலும், பசியடங்கிப் போய்விட்டது.

இன்னும் மாதவன் கஞ்சி குடிக்கவில்லை. அவனும் காலையிலிருந்து உண்ணாமல்தான் கிடக்கிறான். அவனுக்கும் பசி. கஞ்சிப் பானையின் அடியில் சிறிதளவு கஞ்சியிருந்தது. அதைக் குவளையில் எடுத்து ஊற்றினான் மாதவன். கிட்டத்தட்ட முக்காற் குவளைக் கஞ்சியிருந்தது. அதை ஊற்றி எடுத்த பிறகு மாதவனுக்கு ஒரு எண்ணம் உதித்தது. அந்த முக்காற் குவளைக் கஞ்சியையும் புதியவனிடம் சும்மா நீட்டினான். 'அவனுக்குத் தெரியாமலா இருக்கும் நான் இன்னும் கஞ்சி குடிக்காமலிருப்பது. வேண்டாம் நீங்கள் சாப்பிடுங்கள் என்றுதான் அவன் சொல்வான்' என்று எண்ணிக்கொண்டு அவன் அப்படி நீட்டினான். அந்தப் புதியவனோ மாதவன் சற்றும் எதிர்பாராத முறையில் கஞ்சிக் குவளையை வாங்கிக் கொண்டான். பாவம், மாதவன் என்ன செய்வான்! விக்கித்து அப்படியே சற்று நேரம் நின்றுவிட்டான். 'சரி, பரவாயில்லை. இன்று ஒரு நாள் கஞ்சியில்லாமற் போனால், நான் என்ன இறந்தா போய்விடுவேன்! இதோ இவன் மூன்று நாட்கள் பட்டினியாகக் கிடந்திருக்கின்றானே!' என்று தனக்குத்தானே ஆறுதல் கூறிக்கொண்டு பக்கத்திலிருந்த தண்ணீர்ப் பானையிலிருந்து இரண்டு குவளை தண்ணீரை எடுத்து மடக் மடக் என்று குடித்தான்.

அந்தக் குப்பத்து மத்தியில் ஒரு சிறு குடில். அங்கே ஒரு பெரியவர் இருந்தார். அவர் — அறிவாலும், ஆற்றலாலும் பெரியவர். அருளாலும், அறத்தாலும் பெரியவர். அவர் வாழ்ந்த குடில் அந்தக் குப்பத்துக்கே பொதுவான குடில். அவரோ அந்த ஊருக்கே பொதுவானவர். அந்தக் குடிலில் அவர் ஒருவர்தான் இருக்கின்றார் என்று பெயர். ஆனால், அங்கே எப்போது பார்த்தாலும் ஆட் புழக்கம் மிகுந்து நிறைந்தேயிருக்கும். அந்தப் பெரியவரின் எண்ணமெல்லாம் அந்தக் குப்பத்துவாழ் மக்களைப்பற்றித்தான். அவர் திட்டம் எல்லாம் அந்த மக்களின் வாழ்வை வளமாக்கும், நிலையினைச் சீராக்கும் நெறிவகைகளைப்பற்றித்தான். அவர் உண்ணவேண்டிய வேளையில் உண்ணுவதில்லை; உண்ண முடிவதில்லை; உறங்கவேண்டிய வேளையில் உறங்குவதில்லை; உறங்க முடிவதில்லை. ஓயவேண்டும் என்று அவர் எண்ணியதேயில்லை. அப்படியே தம்மை மீறி அசதி ஏற்பட்டாலும் அந்த அசதியை — அவருடைய மெய் வருத்தம் பாரா, பசி நோக்கா, கண் துஞ்சா.........கருமமே கண்ணான நெஞ்சம் நெட்டித் தள்ளிவிடும்.

அந்தப் பெரியவரிடம் மாதவன் சென்றான். உடன் அந்த மூன்று நாட் பட்டினியும் போனான்.

"இவர் நல்ல நல்ல கவிதைகள் எழுதியிருக்கிறார். பெயர் எட்டய்யனும். நகர் முழுதும் மூன்று நாட்கள் சுற்றிச் சுற்றி அலைந்து திரிந்தாராம். கடைசியில் மூன்று நாள் பட்டினியோடு ஓரிடத்தில் களைத்து வீழ்ந்து கிடந்தார். நான் அழைத்து வந்தேன்'' என்று புதியவனை மாதவன் அறிமுகம் செய்து வைத்தான்.

பெரியவர் எட்டய்யனை ஏற இறங்கப் பார்த்தார். அவன் யாத்திருந்த கவிதைகளைப் படித்தார்.

"உடல் உழைப்பு உன்னால் முடியாத ஒன்று என்று நினைக்கிறாய், இல்லையா?'' எடுத்த எடுப்பில் இந்த வினாவைப் போட்டார் பெரியவர்.

எட்டய்யன் பதில் சொல்லவில்லை. அவன் தயங்கி நின்றான்.

"எழுத்தாளர்கள் நம் நாட்டில் உரிய மதிப்பைப் பெறவில்லை. அவர்களிற் பலருக்கு வேண்டும் அளவு இல்லாவிட்டாலும், ஓரளவாவது உரியவர்களிடமிருந்து உதவி—ஆதரவு கிடைப்பதில்லை என்பது முழுக்க முழுக்க உண்மைதான். எனினும் அதன் அடிப்படையான முன்னிலை என்னவென்பதை நாம் எல்லாம் ஓர்ந்து பார்க்கவேண்டும். இன்றைய எழுத்துத் தொண்டின் முக்காற் பகுதியும்,—அதற்கு மேலும் பெரும்பாலும் வசதியுள்ளவர்களுக்கும், வாழ்க்கையின் உயர் நிலையிலிருப்போர்க்குப் பயன்படுமாறுதான் ஆக்கப்பட்டிருக்கிறது. யார் பயன் தரும் எழுத்தாக்கங்களையும், அவற்றை ஆக்கியோர்களையும் ஆதரிக்க வேண்டுமோ, பாராட்ட வேண்டுமோ அவர்கள் எழுத்து மணமே இல்லாதவர்களாகப் பெரும்பான்மையாகவும், அரைகுறையாகத் தெரிந்தவர்களாகச் சிறுபான்மையாகவும் இருக்கின்றனர். அவர்கள் எல்லாருமே வாழ்வு என்றால் என்னவென்று தெரியாத இயந்திரமாக வதிந்துகொண்டு கிடக்கிறார்கள். பாராட்டவேண்டியவர்கள், ஆதரிக்க வேண்டியவர்கள் துன்பமும், துயரும்பட்டு உளைந்து நிற்கும் நிலையில் அன்னாரிடமிருந்து பாராட்டுப் பெறுவது எவ்வாறு? ஆதரவு பெறுவது எவ்வாறு?

"என்னைக்கேட்டால், இப்போது இப்படிச் செய்யப்படுகின்ற இந்த எழுத்துத் தொண்டையே அடியோடு மூட்டைகட்டி வைத்துவிட்டு வேறு வகையில் அவர்கள் முன்னேறுவதற்கான வழிமுறையில் ஈடுபாடு கொள்வதே சாலச் சிறந்தது என்றுகூடச் சொல்வேன்.''

"அப்படியானால் மக்கள் உண்மை நிலை உணருமாறும், பெருகிவரும் உலக மாற்றங்களை அறிந்து கொள்ளுமாறும் புரியப்படுகின்ற எழுத்துத் தொண்டே வேண்டாம் என்கிறீர்களா?''

"கூடாது என்று கூற வரவில்லை வேண்டாம் என்றும் சொல்ல விழையவில்லை. அவை, யாரை நினைத்துக்கொண்டு செய்யப்படுகின்றனவோ அவர்களுக்கு அவை பயன்படவில்லையே என்பதற்காகவும், அவர்கள் அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு ஒரு நிலையை முதலில் உண்டாக்கவேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகவும் அப்படிச் சொல்கிறேன். இன்றைய நிலையில் எழுத்து வளர்ச்சியில், எழுத்துத் தொண்டில் இயல்பாக எழுகின்ற உள்ள விழைவோடு ஈடுபாடு கொண்டு செயல்புரிவோர் மிகச் சிலர்தாம். அவர்கள் எல்லாம் தம்மைப்பற்றிய எண்ணமே இல்லாமல் அந்த அருந்தொண்டில் ஈடுபட்டுக் கிடக்கின்றனர். அத்திறத்தார்க்கு மதிப்பு இல்லை. ஆதரவே கிடையாது. மதிப்புக் கொடுக்காவிட்டால் போகிறது. அறிவறிந்தோர் ஆதரவாவது கொடுக்கலாம்! —மாறாகத் தம்மையே வதைத்து, வதைத்து அவர்கள் ஆக்கிக் கொடுக்கும் படைப்புக்கள், யாரோ சிலரின் வாழ்வை வளமாக்கவும் நிலையை உயர்வாக்கவும்தான் பயன்பட்டு வருகின்றன. இந்த நிலையை உன்னும்போதுதான் அந்தத் தொண்டேகூட எதற்கு என்று உள்ளம் உளைந்து செல்லவேண்டியுள்ளது.

உங்களைப் பொறுத்தமட்டில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அறிவுரையாக எண்ணவேண்டாம்! நட்புரையாக எடுத்துக்கொள்ளுங்கள். வெறும் பொழுதுபோக்குக்காக எழுதவேண்டும் என்ற எண்ணத்தை அடியோடு விட்டொழிக்க வேண்டும்! எழுத்துத் தொண்டைக் கலைப்பணியாகஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள் நீங்கள். அது வாழ்வுக் கலையாக அமையட்டும். மக்களின் நடவடிக்கைகளும், செயல் முறைகளும் ஒழுங்குபடுத்தற்கென்றே அமைந்த கலையாக அது சிறக்கட்டும். எழுத்துத் தொண்டின் மூலம் உங்கள் வாழ்வை அமைத்துக் கொள்ளும் எண்ணத்தை விட்டு விடுங்கள். ஏனென்றால், திரும்பவும் சொல்கிறேன்: உண்மை எழுத்தாளர்களைப் பாராட்டவேண்டுவோரும், ஆதரிக்கவேண்டுவோரும் இன்னும் படிக்கும் நிலையையே அடையவில்லை.''

நாலைந்து நாட்கள் கழிந்தன. எட்டய்யன் அருமையான கவிதையொன்று இயற்றினான். அதைப் பெரியவரிடம் காட்டினான். பெரியவர் அதைப் பார்த்து மகிழ்ந்துபோனார். தம்பொறுப்பிலேயேஅதனைஏடொன்றுக்கு அனுப்பினார்.

பெரியவர் பிறரின் உதவியை எந்த வகையிலும் தமக்கென எதிர்பார்ப்பவர் அல்லர். தம் அலுவல்கள் அனைத்தையும் தாமே செய்து கொள்வதையே விரும்புவர்; செய்து கொள்பவர். எட்டய்யனிடம் எந்த வேலையையும் அவர் ஏவுவது கிடையாது. என்றாலும் எட்டய்யன் பெரியவர் அறியாமலே பல பணி விடைகளை அவருக்காகச் செய்தான். "நான் உங்கள் தொண்டன் நான் உங்கள் ஏவலாள்.'' என்று ஒரு நாள் எட்டய்யன் வாய் திறந்தே சொன்னான்.

பெரியவர் அதனை மிகமிக வன்மையாகக் கடிந்து கூறினர். என்றாலும், அந்த எட்டய்யன் அவ்வாறே கூறிக் கொண்டும், செய்துகொண்டும் வந்தான்.

பெரியவர் அந்தக் குப்பத்து மக்களுக்கு வெறும் அறிவுரைகள் மட்டும் சொல்லிக்கொண்டிருக்கவில்லை. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு குடிலுக்கும் சென்றார். அங்கங்கே உள்ள நிலைகளைக் கண்டார். தம்மால் முடிந்த உதவியை அவர்கள் பால் செய்துகொண்டு வந்தார்.

பெரியவரின் குறிக்கோள் அந்தக் குப்பத்து மக்கள் விடுதலைபெற்று, இன்னல் நீங்கி ஏற்றமுற வாழ்வதைக் காண்பதேயாம். அது நிறைவுபெறுவது எளிதான செயல் அல்ல. என்றாலும், முடியாத ஒன்றல்ல. அதற்கு அந்தக் குப்பத்து மக்கள் அத்தனை பேரின் உதவியும் ஒருமுகமாகத் தேவை.

அந்த மக்களை அடிமைப்படுத்தி ஏவல் கொண்டிருப்போர் சாமானியர்கள் அல்லர். உலகத்துத் தீய ஆற்றல் எனப்படுபவை என்னென்ன இருக்கின்றனவோ அவ்

(13-ம் பக்கம் பார்க்க)

காஞ்சீபுரம்

2—7—'61.

# தம்பி!

அதற்கு என்னமோ கோபம்—பாவம்!

காரணம் என்ன கோபத்துக்கு என்று கேட்கிறாய்? எளிதாகத் தெரிந்துவிடக் கூடியதா, கோபத்துக்கான காரணம்! கொண்டவர்களுக்கே சில வேளைகளில் தெரிவதில்லை—கண்டவர்களுக்கா தெரிந்துவிடும். மேலும் கோபம், அறிவை மாய்க்கும், ஆத்திரத்தைக் கிளப்பும்—அந்த நிலையில், கோபம் கொண்டதற்கு என்ன காரணம் என்று கேட்டால் சொல்லத்தான் முடியுமா, சொல்லத்தான் செய்வார்களா? இயலாதே!

மெத்தப் படித்தவர்கள் என்று தம்மைப் பிறர் நம்பும்படிச் செய்பவர்களாலேயே, கோபத்தை அடக்கிக்கொள்ள முடிவதில்லை. இது, பாவம் படித்தவர் பட்டியலில் சேராதது! கோபம் கொண்டதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், சொல்லவா போகிறது. மேலும் சிறிதளவு கோபம் வளரும். கீச்சுக் கீச்சென்று கத்தும்! கொத்தும்! ஓ! சொல்லவில்லையல்லவா, உனக்கு—இது ஒரு குருவியின் கதை!!

மரப்பொந்தில், தாய்! பக்கத்துக் கிளையில் இது. கோபமாகத் தாயை அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்தால், தன் 'பிகுவு' கெட்டுவிடும் என்ற நினைப்பு-வேறு பக்கமே பார்த்தபடி, உட்கார்ந்திருக்கிறது. தாய், "எத்தனை பிகுவு என் கண்ணுக்கு!" என்று எண்ணியபடி பரிவுடன், பார்க்கிறது.

குருவி, மரங்கொத்தி அல்ல! பழமாகக் கிடைத்தால், கொத்தித் தின்னும்—துண்டு துணுக்கு என்றால், விருப்பம் கொள்ளும்—சிரமமின்றித் தின்னலாம் அல்லவா—அதனால்.

மரங்கொத்தியின் மூக்கு, ஒரு துளைக்கருவி அல்லவா—அந்தப் பெருமை அதற்கு. பறந்து செல்லும், துளைக்கும்—வேறு இடம் பறக்கும். இந்தக் குருவிக்கு அதைக் கண்டதால், ஒரே வியப்பு!! எத்தனை பெரிய மரம்-துளைத்தேவிட்டதே! மரம், அசைந்தது, ஆடிற்று; இலைகள்தான் உதிர்ந்தனவேயன்றி, 'மரங்கொத்தி' துளைப்பதைத் தடுத்திட முடியவில்லையே, அதனால். செ! இவ்வளவுதானா, இந்த மரம்! இதற்கு இத்தனை பெரிதாக ஓங்கி வளருவானேன்! ஒரு சிறு பறவையின் மூக்குக்குத் தப்ப முடியவில்லை—துளைத்தே விட்டது! உருவம்தான் மிகப்பெரிது; உள்ள வலிவு மிகக்குறைவு!!—என்று நினைத்தது, குருவி.

## ★ கதைகள்--கருத்தளிக்க

முதலிலே, இந்த நினைப்பு ஒருவிதமான மகிழ்ச்சி கூடக் கொடுத்தது, குருவிக்கு. மரத்தைத் துளைத்தது ஒரு பறவை—நம் இனம்!!—என்பதால் ஒரு மகிழ்ச்சி.

அதனால், குருவி, மரங்களை அலட்சியமாகக்கூடப் பார்க்கலாயிற்று. மரம் என்றால் என்ன, நான் பயப்பட வேண்டுமா!! என் இனத்தினால், துளைக்கப்படுகிறது— இந்த மரம்!! இதற்கு, நான் ஏன் பெருமை தரவேண்டும். என்னைக் கண்டல்லவா, மரம் பயப்படவேண்டும், நடுங்க வேண்டும்! ஓ! ஓ! மரம் ஆடுவது, நடுக்கத்தால்தான் போலும். ஆமாம், பயத்தால் நடுக்கம் ஏற்படுகிறது, மரததுக்கு. இதை நாம் இதுநாள் வரையில் தெரிந்து கொள்ளாமலிருந்துவிட்டோமே!!—என்றெல்லாம் எண்ணிக்கொண்டது. குருவிதானே பாவம்!!

இந்த நினைப்பு எழுந்தது முதலில் தாய்க்குருவிக்குப் புரியவில்லை—தெரியவில்லை. குருவி, இரையைத் தின்னும்போது, வேகமாகக் கொத்தக் கண்டபோது கூட, தாய்க்குருவிக்குச் சந்தேகம் வரவில்லை—சரியான முறையிலே, தீனியைக் கொத்தித் தின்னக்கூடத் தெரியவில்லையே, இத்தனை நாளாகியும்—இது எப்படித்தான் பிழைக்கப் போகிறதோ, என்று எண்ணி தாய்க் குருவி கவலைப்பட்டது.

குருவிக்கு, மரங்கொத்திக்கு இருப்பதுபோன்ற 'துளைக்கருவி' தனக்கு இல்லை என்ற நினைப்புக்கூட எழவில்லை. நாமும் பறவைதான் என்ற எண்ணம் மட்டுமே மேலோங்கி இருந்தது. பறவை, மரத்தைத் துளைக்கும்—நாமும் பறவை! — இவ்வளவுதான் அதன் எண்ணம். பாவம், குருவிதானே! வண்டி வண்டியாக ஏடுகளை வைத்திருக்கும் மேதைகளே, இந்த விஷயத்தில் தவறாக எண்ணி நடந்துகொள்ளும்போது, குருவிக்குக் குறை அறிவு இருந்ததில் என்ன ஆச்சரியம்.

'மரங்கொத்தி' வேறோர் மரத்திலே, துளைபோட்டுக் கொண்டிருந்தது. அதற்குக் கர்வம்! பார்! என் திறமையை! இத்தனை பெரிய மரத்தை நான் துளைத்து விடுகிறேன். 'தடியன்'போல ஓங்கி வளர்ந்திருக்கிறதே தவிர, மரத்தினால் ஏதாகிலும் செய்ய முடிகிறதா, பார்! —என்று கேட்பதுபோல, மரங்கொத்தி. துளைப்பதும், சுற்றுமுற்றும் பார்த்து, கழுத்தைப் புனைப்பதும், வெற்றியைத் தெரிவிக்கும் போக்கில், கிறீச்சிடுவதும் மீண்டும், துளைப்பதுமாக இருந்தது. குருவிக்குக் கொள்ளை சந்தோஷம், உற்றுப்பார்த்தது பலமுறை! நாமும் பறவை! நமக்கும் மூக்கு இருக்கத்தான் செய்கிறது!! — என்ற நினைப்பு — உடனே, குருவியும். மரத்தைக் கொத்தத் தொடங்கிற்று; துளைக்க முடியவில்லை. குருவிக்கு வெட்கம்! அங்கே பார்த்தால். மரங்கொத்தி துளைக்கிறது! ரோஷம் குருவிக்கு! பலமாகக்கொத்திற்று —மூக்குக்கூடச் சிறிது வலித்தது — மரத்தின் பட்டை கூடப் பெயர்ந்திடவில்லை பழக்கம் இல்லாததால். இப்படி, இன்னும் ஒரு நாலு கொத்து பலமாகக் கொத்தினால், மரததைத் துளைத்துவிட முடியும்—ஏன் முடியாது? அதோ, நம் இனம் அங்கு துளைக்கிறதே! நாமும் பறவைதானே'—என்று எண்ணிற்று—வேகமாகப், பலமாகக் கொத்தலாயிற்று. துளைக்க முடியவில்லை. அது மட்டுமல்ல. கொத்தியதால், மூக்கு வலித்தது. மேற்கொண்டு, கொத்த முடியவுமில்லை. அங்கோ, மரங்கொத்தி வேறோர் கிளை சென்று, துளைக்கிறது. குருவிக்குக் கோபம்!!

கோபம் கொண்ட குருவியைக் கேலி செய்வது போல மரங்கொத்தி சுற்றிச் சுற்றி வட்டமிடுகிறது. மரத்தைத் துளைத்துவிட்டேன்! துளைத்துவிட்டேன்!! நானும் பறவை! நீயும் அதே இனம்! என்னால் முடிந்தது! உன்னால் முடியவில்லை!! — என்று கூவுவதுபோலத் தோன்றிற்று குருவிக்கு.

இந்த அவமானத்தைத் தாங்கிக்கொண்டு, நான் பறவை இனம் என்று சொல்லிக்கொள்ள வேண்டுமா! கூடவே கூடாது! பறவை இனத்திலேயே, நானோர் பாவியோ! பரிதாபத்துக்குரிய பாவியாகவா இருப்பது. கூடாது!!—என்று எண்ணிற்று. கோபம் தலைக்கேறி விட்டது. துளைத்தேவிடுவது என்று, ஆத்திரத்துடன், வேலையை வேகமாக, கோபத்துடன் தொடங்கிற்று. ஏற்கனவே, அலுப்பு—வலி—எனவே, மூக்கு உடைந்தது—வலி தாளமாட்டாமல், குருவி, பொந்துக்குள் சென்றது. தாய்க் குருவி, "உனக்கேன் வீண்வேலை! மரங்கொத்தியைப் பார்த்து, உன் மனதிலே வீணான எண்ணத்தை வளர்த்துக்கொண்டது தவறு அல்லவோ! அதற்கு உள்ள 'மூக்கு' அப்படி—துளைக்கும் கருவியாக இருக்கிறது. உனக்கு ஏது, அந்தக்கருவி! உனக்கு எதற்கு அந்த வேலை? — என்று கேட்பது போலப் பார்த்து, சேர்த்துவைத்திருந்த பழத்துண்டைக் குருவியின் வாயில் கொடுத்துத் தின்னச்செய்தது. குருவிக்குக் கோபம் நீங்கிற்று—விவரமும் புரிந்தது.

•

எதற்காக அண்ணா! குருவிபற்றிய கதை என்று கேட்கிறாயா, தம்பி! வயதாகிறதல்லவா, அதனால் கதை சொல்லும் போக்கு இருக்கிறது எனக்கு. நானென்ன, கனடா நாட்டு அரசியலைப்பற்றி எழுதப்பட்ட, 22-ரூபாய் விலையுள்ள புத்தகத்தில் 777-ம் பக்கத்தில் ஒன்பதிலிருந்து இருபத்து ஏழாவது வரையில் கோடிட்டு, அதைப் படித்துக்காட்டி, 'புத்தி புகட்டும்' ஆசிரியன் போன்றானகத் தலைவன் இருக்க வேண்டும், மக்களோ மாணாக்கர்களாக இருக்கவேண்டும், 'பிரம்படி'க்கும் தயாராக! — என்று கூறுபவனா'' —இல்லையே! உன் அண்ணன்! அவ்வளவுதான்!

ஆனால், தம்பி! கதையைப் படிக்கப் படிக்கக் கருத்துகள் ஊற்றெடுத்தபடி இருக்கும்.

ஒவ்வொரு முறை படிக்கும்போதும் புதுப்புதுக் கருத்துக்கிடைக்கும். பல பிரச்சினைகளை விளங்க வைக்கும்.

இந்தக் கதையிலே வருகிறதே 'குருவி'—இதன் போக்கு, ஒரு மரங்கொத்தி செய்வதைத் தானும் செய்ய வேண்டும்—அப்போதுதான் தனக்குப் பெருமை என்று எண்ணிக்கொண்டது. பாவம் குருவிதானே!

ஆனால், குருவிகளை மட்டுமல்ல, கொல்லும் புலிகளைக்கூடக் கூண்டிலே அடைத்திடவல்ல வீரமும்,

( 8-ம் பக்கம் பார்க்க )

# இருந்தும் இல்லா நிலை!

மலர் 19 ] ஆண்டு சந்தா ரூ. 8 (2—7—61) தனிப்பிரதி 16 காசு [ இதழ் 49

'மத்திய அரசினர் அளவில்லா அதிகாரங்களைத் தங்களிடம் குவித்துக்கொண்டுள்ளனர், மாநில அரசு வெறும் நகரமன்ற நிலையிலேயே இருக்கிறது' என்ற நிலைமையினை இன்று மறுப்பார் இல்லை. ஒன்று இரண்டு என்று இல்லாமல், எதிலும் மத்திய அரசினரின் ஆதிக்கமே மிகுந்துள்ளது. மக்களின் அன்றாட அவசியத் தேவைகளை நிறைவுசெய்து தரும் பொறுப்பு மாநில அரசுக்கு உண்டு. ஆனால், அதற்கான செயல் முறைகளை வகுத்துக்கொண்டு பணியாற்ற அதற்கு அதிகாரம் இல்லை. நெருக்கடி நிலை நேரும்போது மாநில அரசு திகைக்கிறது; திண்டாடுகிறது.

சில திங்களுக்கு முன்னர் நமது மாநிலமெங்கும் சருக்கரைத் தட்டுப்பாடு நிலவியது. அரசினர் சில இடங்களில் சில மூட்டைகளைப் பிரித்துச் சிலருக்குத் தருவதும், பலர் அதைப்பார்த்ததும் சருக்கரை கிடைத்ததுபோலத்தான் என்று திரும்புவதுமாக இருந்தது. இன்று அந்த அளவு நெருக்கடி இல்லை எனினும், திருச்சி, மாயவரம் பகுதிகளில் பற்றுக்குறை' உள்ளது, என அமைச்சர் பக்தவத்சலமே ஒப்புக்கொள்ளுகின்றார். இத்தனைக்கும் நமது மாநிலத்தில் முன்னைக்கிப்போது சருக்கரை ஆலைகளின் எண்ணிக்கை பெருகியுள்ளது. உற்பத்தியும் மிகுந்துள்ளது. 'தமிழ்நாட்டுச் சருக்கரை ஆலைகளில் ஏராளமான சருக்கரை உற்பத்தியாகித் தேங்கிச், சேமித்துவைக்கப் போதிய கிடங்கு வசதிகூட இல்லாமல் தவிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது' என்று அமைச்சர் பெருமிதப்படுகின்றார்.

தேங்கிக் கிடக்கிறது, தவிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது எனினும்,

திருச்சி, மாயவரம் பகுதிகளில் பற்றுக்குறை நிலவுகிறது.

விசித்திரமான நிலை — ஒப்புக்கொள்ளுகிறார் அமைச்சர். அதற்கான காரணத்தையும் ஆராய்ந்து கூறியுள்ளார்.

உண்மை, ஆற்றல் மிக்கது அல்லவா? அது எதையும் மீறி வெளிவரும் அல்லவா? ஆகவே, அமைச்சரின் அகத்திலிருந்து வெளிவந்துள்ளது:

> சில விதிகளைத் தளர்த்தி, நிலைமையைச் சீர்படுத்த மாநில சர்க்காருக்கு அதிகாரம் வழங்கும்படி மத்திய சர்க்காரைக் கேட்டிருக்கிறோம்.

என்று கூறுகின்றார். மாநில அரசுக்கு சருக்கரை வழங்கலில்கூடச் சரியான அதிகாரம் இல்லை. டெல்லியைக் கேட்டே தீர்ப்புப் பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் மாநிலத்தில் 'அரசு' என்று பெயரளவில் ஒன்று இருந்தென்ன பயன்?

இன்னும் மிகுதியான அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்டால், "போதும்" என்கின்றனர் சிலர். இன்னும் மிகுதியான அதிகாரம் என்றால், எவ்வளவு அதிகாரங்கள், எதில் எதில் எவ்வளவு எவ்வளவு என்ற சிக்கல்கல்கள் முளைக்கும். என்னதான் அதிகாரங்கள் இருப்பினும் ஆட்சிப் பொறுப்பில் உள்ளோரின் தனிப்பட்ட செல்வாக்கும் நிலைமையும் ஓரளவுக்கு இடையே தடையாக நிற்கத்தான் செய்யும். அப்போது மறுபடியும் இதே கதைதான்!

'இருந்தும் இல்லாநிலை' என்ற பயங்கரமான— படுமோசமான முறையை இங்கன்றி வேறெங்கும் காண முடியாது. கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை என்பது போல், போதிய அளவு சருக்கரை இருந்தும் சில இடங்களில், அது கிடைக்கவில்லை என்று கூறப்படுமானால், அதனைப் பெறக்கூடிய அதிகாரம் நம்மிடம் இல்லை என்றுதான் பொருள்.

இலங்கையிலே தமிழர் வதைபடுகின்றனர்; இங்குள்ள அரசு அதனைக் கேட்க இயலவில்லை. இங்கே தொழில்கள் தொடங்க வேண்டுமாயினும் அங்கே இருந்து அனுமதி வரவேண்டும். அரிசியின் அளவு பற்றியும் அவர்களே முடிவு கூறுவர். சர்க்கரை— இங்கு உற்பத்தியாகும் சர்க்கரையும்—அங்குள்ளோரின் அதிகாரத்திற்கு உட்பட்டது என்றால், இதற்கெல்லாம் என்ன மருந்து? மாற்று எது?

நாம் கூறும் மருந்தே மாமருந்து; மாற்று வழி: பிரிவினை தவிர வேறில்லை என்பதே நல்வழி. முழு அதிகாரங்கள் கொண்டதாக அமையும் 'நமது அரசு'தான், தனிநாடுதான் வழிபிறக்கச் செய்யும். இல்லையெனின் 'விசித்திரமான சூழ்நிலை' அடிக்கடி உருவாகிக்கொண்டுதான் இருக்கும்.

6-ம் பக்கத் தொடர்ச்சி

குவலயத்துக்கே புத்திபுகட்டும் பேரறிவும்கொண்டிருப்பதாக எண்ணம்கொள்ளும் மனிதர்கள்கூட அல்லவா, குருவி வீணான வேலையில், காரணமின்றி ஈடுபட்டது போல் ஈடுபடுகிறார்கள்.

வீணான வேலையில் ஈடுபடுவது கூடாது! துளைக்கும் வேலைசெய்யவென்றே, மரங்கொத்தி இருக்கிறது. அதைப் பார்த்துவிட்டு, நாமும் அதுபோல் துளைக்க வேண்டும் என்று எண்ணி மூக்கைக்கெடுத்துக் கொண்ட குருவிபோல, மனிதர்களிலும் சிலர் உளர். நாம் அதுபோல் ஆகக்கூடாது என்பதற்காகத்தான், இந்தக் கதை!!

குருவி யாரைக் குறிப்பிட? மரங்கொத்தி, எவரை மனதிலே வைத்துக்கொண்டு? தாய்க்குருவி, யார்?—என்றெல்லாம் கேட்காதே, தம்பி! அப்படி எவரையும் மனதிலே வைத்துக்கொண்டு, கட்டப்பட்ட கதை அல்ல இது. தும்பிகள் பறந்திடும் தோட்டத்திலே, மலர்களைப் பழித்திடும் வண்ணம்கொண்ட வண்டுகளும் பூச்சிகளும் இருந்திடக் கண்டேன்! சுற்றிச் சுற்றி வட்டமிடுகின்றன, சத்தமிட்டபடி! ஒலிக்குக் காரணம், யாதோ, பொருள் என்னவோ, என்று எண்ணியபடி, காட்சியைக் களிப்புடன் கண்ட நிலையில், மரங்கொத்தி கண்டேன்! மரத்தைத் துளைத்தபடி இருந்திடக் கண்டேன்! பிறகு குருவியையும் கண்டேன்! கதையாகக் கூறினேனே, அது அவ்வளவும் கண்டேன்.

மனித இனத்திலும், உள்ளதைக் குலைக்க, நல்லதைக் கெடுக்க, மொத்தத்தைத் துளைத்திடும் செயலிலேயே ஈடுபட்டபடி சிலர் இருப்பது என் நினைவிற்கு வந்தது. மரப்பொந்தில், தாயின் அன்புக் கதகதப்பில் இருந்திடவேண்டிய, குஞ்சுக் குருவியும், துளைக்கும் வேலையில் ஈடுபடுவதுபோல, சிலர், வீண் வேலையில், உள்ளதைக் கெடுப்பதில் ஈடுபடுவதை எண்ணிக்கொண்டேன். குருவி, துளைபோட முடியாமல் பொந்துக்குள் சென்றுவிட்டதைக் கண்டேன்; இந்தக் கதை வடிவம் கொண்டது.

•

இன்னும் ஓர் கதை தம்பி! இதுவும் கருத்துக்காகத்தான், காலம் போக்க அல்ல! இதிலும் குருவி! ஆனால், குருவியுடன், குமரி, குமரன், குழவி!!

•

தோட்டத்தில் முளைவிட்ட 'அவரை' கண்டு அவன், இன்பம் சுமந்து குங்குமநிறக்குழவி பெற்ற தாய்போல் குதூகலித்தான்.

கொடி வளரும்; பூ பூக்கும்; கொத்துக் கொத்தாய்க்
காய்க்கும், காண்போம் என்று, அவன்
எண்ணி அகமகிழ்தான்; என் மகவும்
ஈராண்டு ஆனதுமே, கைவீசி நடை
நடந்து மெய்சிலிர்க்க வைத்திடுவான்
என்றே தாயும், மை பூசி
பொட்டிட்டு மதலை தன்னை மார்போடு
அணைத்துச் சொல்லும் பான்மைபோலே.

இவனுக்குத்தானென்ன இத்தனை களிப்பு! ஏதோ எங்கும் இல்லாத செல்வத்தை இவன் பெற்றவன் போலே, நித்தநித்தம், பார்த்துப் பார்த்து நின்று பல பேசி மகிழ்கின்றான் — பைத்யமேதானோ இவனுக்கு என்று அண்டை பக்கம் உள்ளோர் பேசினர் கேலி மொழி, அதுவும் கேட்டு, மூக்கோ சப்பை இதற்கு, வாயும் பொக்கை, வண்ணம் சிகப்பல்ல, வரும் கருப்பை அறிவிக்கும் வகைதான் ஈது என்று தன் குழந்தையின் எதிர்வீட்டுப் பாட்டி ஏளனம் செய்கையிலே, கண் கெட்டதாலே பாட்டி! என் கரம் இருப்பது கட்டித் தங்கம் என்பது உனக்குத் தெரியவில்லை, உன்னைப்போல் இருக்குமென எண்ணிக்கொண்டாய்; என் செல்வம் 'ராஜாக்குட்டி', எந்தன் கலி தீர்க்க வந்தான், என்று பேசுகின்றாள் எழில் மாது? இல்லை! இல்லை! தன் மகவை உச்சிமோந்து 'இச்'சளித்து இருக்கின்றாள்; காண்கின்றோம். அஃதேபோலத் தன் தோட்டக் கொடியைக் கண்டு எவர் என்ன கூறினாலும், இவர்க்கென்ன தெரியும், போ! போ! என்றெண்ணித் தோட்டம் சென்று, இலைகளை எண்ணிப் பார்ப்பான், இன்னும் எத்தனை நாட்கள் போனபின், பூ காண்போம் என்று கணக்கெடுத்துக் களித்திடுவான், குதித்திடுவான்.

கொடி படர்ந்தது; மலர் பூத்தது; பிஞ்சுகள் இங்கும் அங்கும்!!

பேசாத கொடி ஏதேதோ சேதிகள் சொல்வது போன்று, அருகே நின்று, அந்த அசைவிலே அகமகிழ்வான்.

கொத்துக் கொத்தாகக் காய்க்கும்; மெத்த உருசியாயிருக்கும்; பொரித்தாலும் கூட்டு வைத்துத் தின்றாலும் வாய் மணக்கும்; குழம்புக்கும் ஆகும் நன்றாய் என்றெல்லாம் எண்ணி நின்றான்.

பக்கத்து வீட்டில்தான் அந்தப் பாவை பெற்றாள், பைங்கிளி, பசும்பொன், குலக்கொடி என்றெல்லாம் கொஞ்சிடும் குழவி ஒன்றுஆண்டு நாலைந்துக்கு முன்னம்

அந்த அழகுச் சிலைக்கு உயிர் உண்டு, ஆதலாலே, தாய் காண ஓடி ஆடி, தளிர்க்கரம் தன்னால் கன்னத்தைக் கிள்ளும், சுண்ணத்தைக் குழப்பி அழுகுரலெழுப்பும். அது, என்னத்தைச் செய்தாலும் அவளோ, என் ராஜா! வாடா! வேண்டாம்! இதோ பார், உனக்கு நான், ஆனையொடு குதிரைப்பொம்மை அழகழகாய் வாங்கி வந்தேன்! ஆடி மகிழ வாடா, நான் வாழவந்த கோவே! என்றெல்லாம் கொஞ்சுகின்றாள். அவளுக்கு, 'அவரை' அல்ல; 'அஷ்ட ஐஸ்வரியமும்' அவனே!!

பக்கத்துப்பக்கம் வீடு! பாங்கான நேசம் உண்டு! அண்ணன் அவளுக்கு அவனும்—உள்ளத்தால். அவனுக்கு அந்த 'அவரை'மீதுள்ள அன்பு கண்டு 'களுக்' கெனச் சிரிப்பாள், குறும்பாய்.

'ராஜா' வாளாக இருத்தல் உண்டோ? வாளெடுத்துமே சென்று வழி நிற்கும் பகையைவென்று, புதிய நாடு பெற்று, புதுப்பெருமை தேடானோ! இவனும் புறப்பட்டான், தோட்டப்பக்கம், குடைக்கம்பு தூக்கிக் கொண்டு.

சிட்டுக்குருவி கண்டான்—சினமிகக் கொண்டான்—நானிங்கு இருக்கையிலே நடமாட்டமா உனக்கு? என்று கேட்டான், கைகளாட்டி; குருவியும் கீச்சுக் கீச் சென்று கெக்கலி செய்துவிட்டு, ஒரு செடிதன்னை விட்டுவேறென்றுக்குத்தாவ,என்னிடம் சண்டைபோடப் பயந்துமே குருவி, பார்! பார்! ஓடுது, கூடுதேடி என்று கூற எண்ணிச், சுற்றுமுற்றும் பார்த்தான்; யாருமில்லை. இதற்குள் குருவி, பக்கத்துத்தோட்டம் உள்ள அவரைக் கொடியினில் ஊஞ்சலாடி மகிழ்ந்தது; கண்டான்; சென்று, கமபினை வீசினன்; குருவி பறந்தது; கொடி அறுந்தது!

அறுந்த கொடியைச் செல்வன் பார்க்கவில்லை; அவன் பறவையின் சிறகு அறுக்கப் பாய்கின்றன் கோபத்தோடே. குருவியும், விளையாட்டுச் சிறுவன் காண, கொடி முழுதும் மாறிமாறி, குந்துவதும் பறப்பது மாய்க் கோலம் காட்டிற்று. கோல் கரத்தில் இருக்கும் போது கொற்றவனுக்கு என்ன குறை! வீசினன் நாலா பக்கம்! ஒவ்வோர் வீச்சும், 'விர்'ரென்று பறந்திட்ட குருவிமீது வீழவில்லை, கொடிமீதேதான் — ஒவ்வொன் ருய் அறுந்து வீழ்ந்தது; பூவும் பிஞ்சும் வீழ்ந்தன தரைமீதெல்லாம்.

என்னவோ வேலையாக வந்தவன், கண்டான் இதனை. சொல்லவா வேண்டும் அவனுக்கு 'சுரீல்' என்று வந்தது கோபம்? என்ன காரியம் செய்திட்டான், இந்தப் போக்கிரிச் சிறுவன்! செல்லமாய் வளர்த்து வந்தேன், கொடிதனைப் பலநாளாக; எத்தனை அழகாய் பிஞ்சுவிட்டது என மகிழ்விக்க, அத்தனையையும் இந்த அறிவிலி அழித்திட்டானே! ஐயயோ, கொடிகள் எல்லாம் துண்டு துண்டாகக் கீழே அறுந்தன்றே விழச்செய்தான். கோல் ஒன்று வேண்டுமோடா, குரங்கே! வாலும் எங்கே? யார் உன்னை வரச்சொன்னர் கள், இழுத்துப்போய் அறைகின்றேன் பார்! என்றவன் கூறிநின்றன்; கோவென அழுதவண்ணம் குழந்தை வீடு சென்றன்.

கொடிகளை மீண்டும் ஏதோ ஒருவகையாக அமைத்து, கொண்ட கோபம் மாறிச் சோகமாய்ப் போனதாலே, இல்லத்துக்குள்ளே வந்தான் — இருமிய படியே தாயும், என்னடா கூச்சல் என்றள். குழந்தை யாம், குழத்தை! அது கொடிகளை அறுத்துப்போட்டு அழித்தது, என்றன். அடித்தயோ? என்று கேட்டாள்; இல்லை, அடிக்கா முன்பே, அழுதது என்றன்; உற்றுக் கேட்டான், ஓயவில்லை அழுகை; தெரிந்தது.

இடுப்பினில் குழந்தையோடு, வந்தனள் தாயும் அங்கு.

"என்னண்ணு! இப்படியா என் குழந்தையை இரக்கமேயின்றி அடித்துத் துன்புறுத்துவது? 'அவரை' தான் ஆணிப்பொன்னல் ஆனதோ? போனல் என்ன? இதோ உமக்கு, 'அவரை' அரைத் தூக்குக்கு மேலிருக் கும், கொண்டு மகிழ்ச்சிகொள்ளும், குழந்தையைக் கொடுமை செய்யவேண்டாம்'' என்று கூறி மடியினில் கொண்டு வந்த, 'அவரை'ப் பிஞ்சை அவன் எதிர் கொட்டி நின்றள்.

வெட்கம்தான் அவனுக்கு — அதனை ஓரக்கண் பார்வை காட்டிற்று.

கொடி எலாம் அறுத்துவிட்டான்......என்று கூறி ஞன், கோபமின்றி.

"எப்படி விக்கிவிக்கி அழுகின்றன், பார் அண்ணு! இவன் எப்போதும் இதுபோல, அழுததைக் கண்ட தில்லை. என் மனம் என்ன பாடுபடும், சொல்லு'' என்று கேட்டு, அவளும் கண்ணில் நீரை அழைத் திடுவாள்போல நின்றள் — அன்றடம் அழுதழுது குழந்தை அமர்க்களம் செய்வதுண்டு—எந்நாளும் இது போல் அழுததே இல்லை என்று தாய் கூறுகின்றள்— பொய்யா? — இல்லை! அன்பு பெய்திட்ட அபத்தப் பேச்சு!! அந்தப் பொல்லாத குழந்தையும் இவனையே பார்த்துப் பார்த்து அழுதது, விக்கி விக்கி.

"மாமன் அடித்தானென்று ரோஷமடி, மகனுக்கு. அவனே மார்பினில் சாத்திக்கொண்டு மன்னிப்புக் கேட்டாலன்றி ஓயவே போவதில்லை, உனக்கென்ன தெரியும்!'' என்று தொட்டில் தொல்காப்பியமெல்லாம் தொடர் தொடராகக் கற்ற மூதாட்டி கூறுகின்றள்.

இங்குவா! என்றழைத்து, குழந்தையைக் கரத்தில் ஏந்தி, 'அவரை'தானே உனக்கு வேண்டும், அள்ளிக் கொள் அவ்வளவும் என்று, கீழேகிடந்ததைக் கொடுத் தான் எடுத்து; குழந்தை வீசிற்று மீண்டும் கீழே.

அழுகை ஓயவுமில்லை; இவன் செய்வித்தை எது வுமே பலிக்கவில்லை; பார் உனக்கு பழம்தருவேன், பசு வினைக் காட்டுவேன், வா, என்று கூறித்தோட்டம், ஏகினன், குழந்தையோடு.

"என்னடி காசு ரொம்பக் கொட்டியோ கிடக்குது உன் வீட்டில்—ஏனடி இந்த ரோஷம்—எடுத்துச்செல் இதனை'' என்று பாட்டி பரிவுடன் சொன்னுள், பாவையோ, அதைக் கேட்டல்ல, தோட்டத்தில் சிரிப் புச் சத்தம் எழக்கேட்டு மகிழ்கின்றள்.

கிளிகொஞ்சும் காட்சிகாண, தாய் சென்றுள் தோட்டப்பக்கம். அங்கு, கொடியினைப்பற்றி இழுத்து, குழந்தையின் கரம்கொடுத்து, அதை அறுத்துமே குழந்தை, கைகொட்டிச் சிரித்திடவும், அதன் கன்னத் துக்குழியை, அவரைப் பூவினல் நீவி, அவனும், அக மகிழ்ந்திடவேகண்டாள்.

அரைநொடி நின்றள் கண்டு; "அண்ணு!'' என்ற ழைத்தவண்ணம், அவனருகே சென்று, "போக்கிரி அண்ணு! இவன்! இவன் போக்குக்கு ஏற்றவண்ணம் ஆடி நீர், கொடியை எல்லாம் அறுத்திடலாமோ?'' என்று கூறிக், குழந்தையை வாங்கிக்கொண்டு, முத்த மிட்டாள்; அவனே, வையகம் தன்னை வாழ்விக்கும், அன்பின் அருமை அறிந்து அகமகிழ்ந்து நின்றன்.

அங்கெங்கோ ஓர் இல்லத்தில், அவனுக்கென்றே உள்ள மங்கை, தெரிகின்றள், குழந்தையோடு, செடி களின் மறைவில், நன்றய்!!

*

குழந்தைக்குக் கொடியின் — அருமை தெரிவதில்லை; விளையாட்டாகக், கொடியினை அறுத்துவிடுகிறது. பாசம் காரணமாகத், தாயோ, கோபிக்க முடிவதில்லை. கொடியினைப் பாங்காக வளர்த்தவனோ, அது பாழ்படுத்தப்படுவது கண்டு பதறத்தான் செய்கிறான்; எனினும், அன்பின் அருமை அவனையும் தன் வயப்படுத்தவே, அவனும் கொடி அறுத்தேனும் குழந்தை குதூகலம் அடையட்டும்; காண்போம்; கொடியினில் கொத்துக் கொத்தாக 'அவரை' இருந்திடக் காணும்போது ஏற்படும் களிப்பை மிஞ்சும் களிப்பன்றோ காண்கின்றோம், இந்தக் குழந்தை கன்னத்தில் குழியும் விழ, 'களுக்'கெனச் சிரிக்கும்போது என்று எண்ணுகிறான்.

கள்ளம் கபடமற்ற நிலை குழந்தைக்கு; எனவே கொடியினை அறுக்கிட்டாலும், மூண்டிடும் கோபம் தன்னை அடக்கிக்கொள்ள முடிகிறது. ஆனால், வேண்டுமென்றே ஒருவன் கொடியினை அறுத்தால்! மனம் எத்தனை வேதனைப்படும்!!

விவரமறியாமல், விளைவு தெரியாமல், சிலர், நல்ல காரியத்தைக் கெடுத்துவிடுகிறார்கள். அவர்தம் குறையறிவு கண்டு இரங்குகிறோம். வேறு சிலரோ, வேண்டுமென்றே, நாசம் உண்டாக்கும் நோக்குடனேயே, கொடியினை அறுத்திடுவதுபோன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். கொடிகளை அழித்துவிட்டேன், துண்டு துண்டாக்கிவிட்டேன் என்று அவர்கள் கைகொட்டிச் சிரிப்பர்! அவர் செயலுக்குப் பரிவு காட்டிப் பாராட்டவும் சிலர் முன் வருவர். ஆனால், கொடி படரக்கண்டு, மகிழ்ந்தவன் மனம் என்ன பாடுபடும்! அவனல்லவா, படர்ந்துள்ள கொடியின் அருமை அறிந்தவன். அவன் மனமன்றோ அனலிடைப் புழுவெனத் துடிக்கும், அழிவு வேலை செய்திடுவோனைக் காணின்.

ஆக்கத் தெரியாவிட்டாலும், அழிக்காமலாவது இருக்கவேண்டும்—என்பதைப் பாடமாக்கவே, இதனைச் சொன்னேன்.

விபரமறியாதாரின் செயலால்கூட, அழிவு நேரிடுவது உண்டு—குழந்தை கொடி அறுத்ததுபோல!

அதுகண்டு, கோபம் எழும்; ஆயினும் அடங்கும். கெடுமதியுடையோர் கொடி அறுத்திடுவது போன்ற தீய செயலில் ஈடுபட்டால், உலகம் மன்னிக்காது!!

விவரமறியாதார், கொடி அறுத்திடுவதுபோன்ற அழிவு வேலையில் எவரேனும் ஈடுபட்டால், கதையில் வரும் குழந்தையைக், கொடிக்கு உரிமையாளன், முதலில் கோபித்துக் கொண்டான் எனினும், பிறகு, பரிவு காட்டினான் அன்றோ, மன்னித்து; அது போன்றே, அருமை அறியாமல், விவரம் தெரியாதார், கேடுடைச் செயலே புரியினும், அது கண்டு, நமக்குக் கோபமே எழினும், அதனை அடக்கிக்கொள்வதும், நீக்கிக் கொள்வதுமே முறை என்பதை விளக்கத்தான், இந்தக் கதை!

எது கொடி? எது குழந்தை? என்றெல்லாம் கண்டு பிடிக்கும் காரியத்திலே வீணாக ஈடுபட வேண்டாம், தம்பி! பொதுவாகச் சொல்கிறேன், எந்தத் தனிப்பட்டவர்களையோ, எண்ணிக்கொண்டு அல்ல.

சிலருக்குத் தாம் செய்யும் காரியம், இப்படிப் பட்டது என்று உணர்வு ஏற்பட்டு, வெட்கம் பிறந்தால் நல்லதுதான். ஆனால், ஆசை வெட்கமறியாது என்று அன்றே சொல்லியிருக்கிறார்களே!!

*

நாம் வாழ்ந்த கதை; இன்று வீழ்ந்துகிடக்கும் வேதனை; இதனை மாற்ற நாளை நாம் எடுக்கவேண்டிய நடவடிக்கை, இவைபற்றி எல்லாம் கூறிடுவாய், கேட்டிடலாம், கருத்துப் பெற்றிடலாமென்று நான் நினைத்தால், நீ என்னண்ணா! குருவி கதையும், கொடி அறுத்த குழவி கதையும் சொல்கிறாயே! நமை அழிக்க எண்ணி, ஆளும் கட்சியிலுள்ளோர், இலட்ச இலட்சமாக 'நிதி' திரட்டிக் குவித்தபடி உள்ளனர்; நீயும் கொண்டு வருகிறாய், 101 காசு, 501 காசு, 2001 காசு என்று!—என்றுதானே, தம்பி! கோபம். கோபம் கொள்ளாதே!! இன்னொரு கதை கூறுகிறேன், கேள்.

வயலிலே படர்ந்திருந்தது பூசுணைக்கொடி! பெரிய, பளபளப்பான, பூக்கள், கொடியினில், பொன் நிறம்! கண் கவர் வனப்பு!!

வயலின் ஓரத்தில், வரப்பைத் தன்னிடமாக்கிக் கொண்டு, வளர்ந்திருந்தது ஒரு மகிழ மரம்! சின்னஞ் சிறு பூக்கள், அதிலே!! உற்றுப் பார்த்தாலொழியக் கண்ணுக்குத் தெரியாது. அவ்வளவு சிறுசு!!

கீழே, 'பூசுணை'ப் பூ! மகிழம் பூவைப் பார்த்து கேலி செய்வதுபோல, மலர்ந்து இருக்கிறது. காற்றடிக்கிறது! பூசுணைப் பூவின் இதழ்கள் அசைகின்றன! வா! வா! சின்னஞ்சிறு மகிழம்பூவே' என்னைப்பார்! என் அழகைப்பார்! நீயும் இருக்கிறாயே, பூவென்ற பேருடனே பூனைக்கண் அளவுக்கு—என்று கேலி செய்வதுபோல, அசைந்து ஆடுகின்றது.

மகிழம் பூக்கள், காற்றடித்ததும், உதிருகின்றன, கீழே!

கொடியிலிருந்து பூசுணைப்பூ அறுந்துபோகவில்லை காற்றால். மகிழம் பூக்களோ, குவியல் குவியலாக, உதிர்கின்றன, மரத்தடியில்.

இவ்வளவுதான் உன் வாழ்வு! இவ்வளவுதான் உன் வலிவு! ஒரு காற்றுக்குத் தாக்குப்பிடிக்க முடியவில்லையே என்று, கேலி பேசுகிறது, பூசுணைப்பூ.

இது காலையில் தோன்றிய காட்சி! கொடியிலே கொலுவிருக்கும் பூசுணைப்பூ! குப்பையுடன் குப்பையாகக் கிடக்கும் மகிழம்பூ!!

மாலை! வயலை ஒட்டியுள்ள வீட்டில் வாழும் 'வண்ணக்கிளி' வீதியிலே இருந்த, சாணி உருண்டையை வழித்தெடுத்து, வறட்டியாகத் தட்டுகிறாள், சுவரினிலே!! தம்பி! சாணியுடன் என்ன என்கிறாய்? காலையிலே, களிநடமாடிற்றே, அதே பூசுணைப் பூதான்! ஆமாம். மார்கழி மாதம், வீட்டெதிரே, சாணி உருண்டைமீது பூசுணைப் பூவை அழுத்தி வைப்பர்; கண்டதுண்டு அல்லவா?

கர்வம் கொண்ட நிலையில், என்னைப்பார்! என் அழகைப்பார்! காற்றும் பிய்த்திட முடியாத என் வலிவைப்பார்! பளபளப்பைப் பார்! அளவுபார்! நீயும் இருக்கிறயே பூனைக்கண் அளவு, என்று கேலி பேசும் நிலையில் இருந்தல்லவா பூசணைப்பூ! அதற்கு நேரிட்ட கதியைக் கண்டனையோ? அதைப் பறித்தெடுத்த பாவை, சூட்டிக்கொண்டனளோ, கார்குழலில்! இல்லை! கோயிலுக்கு உகந்ததெனக் கருதி, அங்கு அனுப்பி னளோ? அதுவும் இல்லை! வேறு எங்கு சென்றது, பூசணைப்பூ? சாணி உருண்டைமீது!!

அளவு பெரிது! பளபளப்பு மிகுதி! பொன் நிறம்!! எல்லாம், எதற்குப் பயன்பட்டது? சாணி உருண்டைக் குச் 'சால்வை'யாக!! இந்த இடம் போய்ச்சேரத்தான், இத்தனை 'வாயாடி'த்தனமும், பயன்பட்டது. காலைமுதல் சாணி உருண்டைமீது இருந்தது; மாலையோ, சுவரிலே, தட்டப்பட்டுக், காய்கிறது, 'வறட்டி'யாக!!

பூசணைப் பூவைப் பறித்தெடுத்துச், சாணி உருண் டைக்குப் போர்வையாக்கி, பிறகு, வறட்டிதட்டிடும், பெண்ணின் தலையிலே, என்ன தெரியுமா? மகிழம்பூ மாலை!! ஆமாம், தம்பி! கீழே உதிர்ந்துகிடந்த மகிழம் பூவேதான்! அளவு, சிறியது! பளபளப்பும் இல்லை! உதிர்ந்துதான் கிடந்தது, மரத்தடியில், மண்பரப்பில்! பூசணையால், கேலிப் பொருளாகக் கருதப்பட்ட பூனைக் கண் அளவுள்ள, மகிழம்பு! அதற்கு எது இடம்? சாணி உருண்டை அல்ல! சுவர் அல்ல! மாதின் கூந்தல்!!

பூசணை, அளவு பெரிது, பளபளப்புமிகுதி—ஆனல் மணம் ஏது?

மணமற்றது, சாணி உருண்டைக்குத்தான் ஏற்ற தாயிற்று!

மகிழம்பூவோ, மணம் உள்ளது; அளவு கிடக்கட் டும்; வண்ணம்கிடக்கட்டும்; எனவேதான், அது மாதின் கூந்தலிடம் சென்று, அணியாயிற்று!!

அதுபோலத்தான், தம்பி! காங்கிரசிடம் சேரும் பணம், பெரிய அளவுள்ள பூசணைப்பூ! பளபளப்பு உண்டு, மணம் இல்லை! அளவு பெரிது, ஆயின் அணிவார் இல்லை. சாணிக்கென்று பூசணைப்பூவைப் பயன்படுத்து வதுபோல் காங்கிரசிடம் குவியும் நிதியும், அசங்கிய மான காரியத்துக்குத்தான் பயன்படப்போகிறது! நல்ல காரியத்துக்கு அல்ல! மணம்தர அல்ல!

நம்மிடம் வந்திடும் 101, 1001, 2001 இவைகள், உதிர்ந்துகிடக்கும் மகிழம்பூக்கள்! சாணிக்கு அல்ல!! மணம் அளிக்க!!

இப்படித்தாஞ, அண்ணு! மனதுக்குச் சமாதானம் தேடிககொள்வது!! — என்று கேட்பாய்; தெரியும் எனக்கு.

காங்கிரஸ் பெருந்தலைவர்கள் கேட்ட உடனே, ஆயிரம் பத்தாயிரம் என்று அள்ளித்தருகிறர்கள், சுளை சுளையாக!!

பெறுபவர்களுக்கு அவ்வளவு செல்வாக்கு! தரு பவர்களுக்கு அத்துணை அன்பு! தெரியவில்லையா?— என்று கேட்கிருய், சரி! கோடிவீட்டுக் கோபாலப் பிள்ளையின் கறுப்பு ஆடு, கதை தெரியுமா உனக்கு? தெரிந்திருந்தால், காங்கிரசுக்கு, ஆயிரம், பத்தாயிரம் என்று பணம் குவிவதுபற்றி வியந்து பராட்டமாட்டாய். கேளேன் அந்தக் கதையையும்.

மாரியம்மன் திருவிழா தடபுடலாக! ஊர்வலம் முடிந்து, அம்மனை, உள்ளே கொண்டுபோகும், நேரம். "ஓஹோ!" என்று ஓங்காரக் கூச்சலிட்டான், அருணு சலம்! வந்துவிட்டாள் அம்மன்!!—என்றுகூறி வணங்கி நின்றனர் பக்தர்கள். ஆவேசம் வந்துவிட்டது அருணு சலத்தின்மீது! அதுவரை ஊரார் பார்த்ததில்லை அவ் வளவு 'உக்கிரமான' ஆவேசத்தை.

"அம்மா! தாயே! அங்காள பரமேஸ்வரி! அடி யாரை இரட்சிக்க வேண்டுமம்மா!"—சிலம்புப் பாட்டு, பாடுகிருன் பூஜாரி! ஆவேசமாடிடும் அருணுசலமோ, குதிக்கிருன், உடலை நெளிக்கிருன், கண்களை உருட்டு கிருன், புருவத்தை நெரிக்கிருன், பற்களை நறநற வெனக் கடிக்கிருன். சிறுவர்கள் அலறி அடித்துக் கொண்டு ஓடுகிருர்கள். பெண்களுக்குப் பெரும்பீதி. முதியவர்கள் முணுமுணுக்கிருர்கள்.

"எவ்வளவு கோபமும் எங்கள்மேல்,
வேண்டாமம்மா! என்ன நீ, கேட்டிட்டாலும்
இப்போதே, தருவோம் அம்மா! எல்லையைக்
காத்து நிற்கும், எங்கள் குலதேவி அல்லோ!"

பாடலைப் பூஜாரி, உருக்கமாகப் பாடிவிட்டு, அம்மனைக் கேட்கிருன், என்னகுறை, கூறம்மா? என்று.

"போட்டயாடா பூஜை! போட்டயாடா!
போடுகிறேன், என்று முன்னம் சொன்ன
படியே."

அம்மன் என்ன, பூஜாரிக்குச் சளைக்குமா! பாடுகிறது!!

"என்ன பூஜையம்மா! எங்களிடம் கூறு
மம்மா! கோழிகொண்டுவந்து, குடலெடுத்து
மாலையாக்கிக் கொண்டாடச் சித்தமம்மா!
கோபம்வேண்டாம் தாயே!"

"வேண்டாண்டா, கோழி"

"ஆடு அறுக்க வேண்டுமென்றல்,
ஆகாது என்று சொல்வோம், அம்மா உன்
ஆசை என்ன. அறியச் சொல்லுமம்மா!"

"ஆடு தாண்டா வேணும்"

"ஆகட்டும், தாயே! ஆடு, 'காவு'
கொடுக்கிறேம்"

"சாதாரண ஆடு அல்லடா! வெள்ளாடு
வேணும்—வெள்ளாடு"

"வெள்ளாடு கொண்டுவந்து, வேண
பூஜை செய்வோம், தாயே!"

"வெள்ளாடு வேண்டும்டா-கறுப்பு நிறத்திலே. காலரா நோயைக் கொண்டுவர, காத்திருக்கிரு, மொள்ளேமாரி! உயிர் பிழைக்க வேணுமென்ரு, உடனே வேணும் கறுப்பாடு."

"கறுப்பாடு வாங்கிவர, கணநேரம் தாருமம்மா."

"வேணும்! சந்தையிலே இருக்கற ஆடு வேண்டாம்டா, சண்டாளப் பசங்களா! கோடி வீட்டுக் கோபாலப் பிள்ளேயிடம் இருக்கிறதே, கறுப்பு வெள்ளாடு, அதுதான் 'காவு' கொடுக்கணும். இல்லேயாளு, காலரா நோய் வந்து, ஊரே சுடுகாடாகும். மொள்ளேமாரி, என்னேத் தகிக்கரு! இப்பவே கோபாலப் பிள்ளே வீட்டு, ஆட்டை அறுத்து, அந்த இரத்தத்தைக் கொண்டு எனக்கு அபிஷேகம் செய்யணும். மறந்திங்க, தொலேஞ்சிங்க. மலே ஏறிப் போறேண்டா. மாரியம்மா, நானே தான்."

அம்மன் 'பழம்' சாப்பிட்டுவிட்டு மலேயேறிவிட்டது.

ஊர்ப் பெரியவர்கள் சென்று, 'அம்மன்' சொன்னதைக்கூறி, எவ்வளவோ தடுத்தும் கேட்காமல் கோடி வீட்டுக் கோபாலப் பிள்ளேயுடைய கறுப்பு வெள்ளாட்டை இழுத்து வந்து குளிப்பாட்டி, 'காவு' கொடுத்தார்கள்.

இந்தக் கதைக்கும் காங்கிரஸ் பெருந்தலேவர்களுக்கு, ஆயிரம் பத்தாயிரம் என்று பணம் பலர் கொடுப்பதற்கும், என்ன சம்பந்தம்? என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? அது விளங்க, பழைய சம்பவம் ஒன்று கேள், தம்பி!

ஆவேசமாடிய அருணசலம், கோடிவீட்டுக் கோபாலப் பிள்ளேயிடம், ஆட்டுப் பால் கேட்டான் ஒரு நாள் மருந்துக்காக ஆழாக்கு. இல்லே போ! என்று விரட்டிவிட்டார். கோபம், அருணசலத்துக்கு; "பார்த்துக்கொள்கிறேன், உன்னே; ஒரு ஆழாக்குப் பால் தர முடியாதுன்னு சொன்னேயல்லோ, இரு! இரு! நீ, பதறப் பதற, உன்னுடை கறுப்பு ஆட்டை, 'காவு' கொடுத்துவிட்டு, மறுவேலே பார்க்கிறேன்" — என்று கருவிக் கொண்டான்.

மாரியம்மன் திருவிழா வந்தது; ஆவேசம் ஆடும் வாய்ப்பைத் தேடிக்கொண்டான்; காரியத்தை முடித்துவிட்டான்.

சாதாரண அருணசலம் ஆழாக்குப் பால் கேட்டபோது கிடைக்கவில்லே.

ஆவேசம் ஆடினுன் ஆடே வெட்டப்பட்டது, 'காவு' கொடுக்கப்பட்டது.

தம்பி! பதவி ஆவேசமாடிக்கொண்டல்லவா, பணக்காரர்களிடம் போகிருர்கள், காங்கிரஸ் பெரிய தலேவர்கள்—ஆவேசம் ஆடிய அருணசலம்போல! அதனுல் கிடைக்கிறது ஆயிரம், பத்தாயிரம்! அன்புக் காணிக்கை அல்ல!! அச்சத்தைப் போக்கிக்கொள்ள, ஆபத்தைத் தடுத்துக்கொள்ள ஆகின்ற "செலவு".

சிரிக்கிருயே, தம்பி! சிந்தித்துப்பாரேன், நான் சொல்வதிலே உள்ள பொருள் விளங்கும்.

மரங்கொத்த நினேக்கும் குருவி, கொடி அறுக்கும் குழந்தை, மாலேயாகும் மகிழம்பூ, கோடிவீட்டுக் கறுப்பு ஆடு, எனும் இவையாவும், தரும் கருத்தினே எண்ணிப் பார், தம்பி! சுவை கருதி மட்டுமல்ல, பயன் கருதி!!

இதிலென்ன இருக்கிறது! மதுரைக்குத்தான் வரப் போகிருயே, சுவையும் பயனும் பெற, தர.

அதற்கான ஏற்பாட்டிலே ஈடுபட்டிருக்கும் வேலே இது. அதிகம் எழுதி, அதற்குக் குந்தகம் ஏற்படுத்தலாமா? திருப்பரங்குன்றத்தில் சந்திப்போம்.

அண்ணன்,



வெளிவந்துவிட்டது!

அண்ணு அவர்களின்
கருத்தோவியம்

'கம்பரசம்'

2-ம் பாகம்

விலே 0—50 காசுகள்

மதுரை மாநில மாநாட்டில் கிடைக்கும்.

விபரங்கட்கு:—

சுகுமாரன் பதிப்பகம்
80, C. S. செட்டித் தெரு, சி. காஞ்சிபுரம்

4-ம் பக்கத் தொடர்ச்சி

வளவையும் தமக்கே உரிமையாக்கித் தம்மிடத்தே திரட்டிவைத்துக் கொண்டிருப்பவர்கள். ஆயிர, நூறுயிரக் கணக்கானோர் வாழ்வைப் பறித்து, வாழ்வைக்கெடுத்துத் தங்களின் பீடுவாய்ந்த உயர் மாளிகையைக் கட்டிக்கொண்டிருப்போர். தமக்கு வளத்தையும், உயர்வையும் கொடுப்போர் வாழ்வில் உயர்வும், சிறப்பும் பெற்றுவிட்டால் தங்கள் நிலை இழிந்துவிடுமே என்ற எண்ணம் எப்போதும் உடையவர்கள். அவ்வாறு நிகழ்ந்துவிடாமல் மிகமிக விழிப்போடு எந்த நேரமும், எந்தச் செயலையும் புரிபவர்கள். அவர்களை எதிர்த்து இந்தக் குப்பத்துப் பெரியவர் போர்க்கொடி உயர்த்தியிருக்கிறார். ஆயிரமாயிரம் வகையான படைக்கலங்கள் கொண்டுள்ள முரட்டு வலியார் பலரை இந்தப் பெரியவர் ஒருவர் மட்டும் தன்னந்தனியராக எதிர்த்து நின்றுகொண்டிருக்கிறார். இவர்தம் படைக்கலன்கள் அறத்தின் பாற்பட்ட உண்மையும், அன்புந்தான். இவர்தம் துணையாளர்கள் மாதவனைப்போன்ற அந்தக் குப்பத்து வாசிகள்தாம்.

எட்டய்யன் பல பாடல்கள் புனைந்தான். அவனுடைய பாடல்கள் பெரியவரின் அறநெறியைப் பற்றியும், அவர்தம் அறப்போர் பற்றியும் குறிப்பனவாய் அமைந்தன. குப்பத்து ஏழையர் அவற்றை வரவேற்றனர். குப்பத்து மக்களிடையே அவனுக்கு மதிப்பு ஏற்பட்டது. பாவம், துன்பச் சகதியில் உழன்று கிடக்கும் அந்தக் குடிசை வாழ்வோரால் எட்டய்யனைச் சும்மா பாராட்டுவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

நாட்கள் ஓடின. பெரியவர், தம் திட்டப்படி செயல்கள் புரிந்து கொண்டு போனார். அவர்தம் தொண்டு பெருகப்பெருக மாளிகை வாசிகள் அவருக்கும், அவர் எடுத்துக்கொண்டிருக்கும் அறத் தொண்டுக்கும் பல்வேறு வகைகளில் ஊறு விளைத்துக்கொண்டே வந்தனர். எவ்வாறுவது குப்பத்து மக்கள் நல்வாழ்வு பெற்றுவிடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்பது அவர்தம் அவா. அதற்கு அந்தப் பெரியவரின் செயல்கள் வெற்றியடையாமல் தடுக்கவேண்டும். அவரிடத்து அந்தக் குப்பத்து மக்கள் கொண்டுள்ள பேரன்பை மாற்றவேண்டும். அவர்மீது அவர்கள் தப்பெண்ணம் கொள்ளுமாறு செய்தல்வேண்டும்.

மாளிகைவாசிகளுக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றிற்று. பெரியவர்பால் அவர் திரும்பத் திரும்பச் செய்துவந்த இடையூறுகளோடு சேர்த்து அவருக்குத் துணையாக நிற்போரையும் பலவகையில் நெருக்கடிக்குள்ளாக்க முனைந்தனர். அப்படி அவர்கள் முனைந்து செய்யப் புகுந்த செயலால் ஒரு திருப்பத்தைக் காண விழைந்தனர். எனவே, குப்பத்து மக்களைப் பற்றியும், அவர்களுக்காக இரவு பகலாகப் பாடுபட்டு வரும் அந்தப் பெரியவரைப் பற்றியும் புகழ்ந்து, புகழ்ந்து பாடல்கள் புனைந்துவரும் எட்டய்யனுக்கே இடர்புரியத் தொடங்கினார்கள்.

எட்டய்யனால் மாளிகை வாசிகளின் தொந்தரவுகளைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அவனுக்கு அந்தக் குப்பத்துவாழ் மக்களின் நலனைவிடத் தன்னுடைய நலனே பெரிதாகத் தோன்றத் தலைப்பட்டது.

மாளிகை வாசிகளோ ஒருபுறம் எட்டய்யனுக்கு இடையூறு விளைத்துக்கொண்டே, பிறிதொருபுறம் அவனைத் தங்கள் பக்கம் இழுத்துக் கொள்வதற்கான வேலைகளில் தீவிரம் காட்டினர்.

"வீணாக அந்தக் குப்பத்து முட்டாள்கள் பற்றி நீ பாடல்கள் பாடுவதால் என்ன பயன் விளையப்போகிறது? உன்னுடைய பாடல்களால் அந்தக் குடிசைவாழ் அடிமைகள் நல்வாழ்வு பெறுவார்கள் என்று நீ எண்ணுவது வெறும் கனவு. உலகம் தெரியாத பேதைகள் அவர்கள். அறிவு இல்லாத மாக்கள் அவர்கள். நாகரிகம் என்பதே இல்லாத காட்டு வாசிகள் அவர்கள். இங்கிதம் தெரியாத ஏழையர்கள் அவர்கள். அவர்களாவது திருந்தப்போவதாவது. அவர்களுக்காவது நல்வாழ்வு கிடைக்கப்போவதாவது! வீணே, விழலுக்கு நீர் இறைத்து நீ மாய்கின்றாய்! உன் ஆற்றல் எல்லாம் வறிதே கழிகிறது. இதோ எங்களைப் பார். நீ சொல்வது ஒவ்வொன்றையும் எங்களால் புரிந்துகொள்ள முடியும். நீ எங்களைப்பற்றி நன்று என்று ஒன்று கூறினால், அதற்காக நாங்கள் ஆயிரம் நன்மைகள் செய்வதற்குக் காத்துக்கிடக்கிறோம். நாங்கள் நாகரிகம் உள்ளவர்கள், நல்லகுடிப் பிறந்தவர்கள் என்பதை நாங்கள் வாழ்கின்ற பெரிய பெரிய மாளிகைகளைக் கொண்டும், எங்கள் செல்வச் சிறப்பைக் கொண்டும், எங்களுக்கு இங்கேயுள்ள செல்வாக்குகளைக் கொண்டும் நீயே நன்கு உணர்ந்துகொள்ளலாம். நாங்கள் எதையும் புரியவல்லவர்கள். நாங்கள் நினைத்தால் இன்றே உன்னை ஒரு தாகூராக்கிவிடமுடியும். அனைத்துலகப் புகழும் உன் காலடியில் வந்து குவியும் வகையெல்லாம் எங்களுக்குத் தெரியும்; எங்களால் முடியும். வீணாக அந்தக் குப்பத்துக் குடிசையில் வாழ்ந்துகொண்டு, எதை எதையோ பிதற்றிக்கொண்டு எங்களுக்கு இடையூறாக அந்தக் குப்பத்துக் காட்டுமிராண்டிகளை அநாகரிக மக்களை, நல்ல குடியிற் பிறவாத மக்களைத் தவறான வழியில் ஈடுபடுத்திக்கொண்டிருக்கும் ஒரு தனி மனிதனைப் பெரியவர், பெரியவர் என்று ஏன் வீணே புகழ்ந்து பேசிக்கொண்டு திரிகிறாய்! வேண்டாம்! விட்டுவிடு அந்த வேலையை! எங்களோடு வந்து சேர்ந்துவிடு! எங்களுக்குத் துணையாக வந்து நின்றுவிடு! பிறகு பார் உன் முன்னேற்றத்தை! எங்களுக்கு இங்கே ஏடுகள் மிகுதி. அவை எல்லாம் உன்னைப் புகழ்ந்தேத்தும். யோசிக்காதே! உடனே ஒரு முடிவுக்கு வந்துவிடு!" என்று அந்த மாளிகை வாசிகளின் பேராளன் ஒருவன் கூறினான்.

உடனே பதில் சொல்லவில்லை எட்டய்யன். அவன் யோசித்தான். 'ஆமாம், இந்தக் குப்பத்து மக்கள் அநாகரிக மக்கள்தாம். இவர்களை நான் புகழ்ந்து பாடியதால்,—இவர்கள் முன்னேற்றங் கருதி நான் செயல் புரியாவிட்டாலும், சும்மா பேசிக்கொண்டு திரிந்ததால் என்ன நன்மையைக் கண்டுவிட்டேன்! அதோடு, இவர்களைச் சீர்திருத்துவது ஆகக்கூடிய காரியமா? அல்லது எளிதான காரியமா?—அடேயப்பா! எவ்வளவு பெரிய வேலை! வீணே நான் ஏன் இந்த வேலையில் மாட்டிக்கொள்ளவேண்டும்? வீணே நான் ஏன் என் வாழ்க்கையைக் கெடுத்துக்கொள்ளவேண்டும்? நல்ல அருமையான, வருவாய் கிடைக்கக்

புதிய முகவரி

"அறப்போர்"

ஆசிரியர்:
இராம. அரங்கண்ணல்
எண் 12—3வது கிராஸ்ரோடு
டிரஸ்ட்புரம். சென்னை-24

கூடிய, புகழ் கிடைக்கூடிய,-உடல் அலுங்காமல், உள்ளம் நோகாமல் பெரும் பேரின்பத்தை அடையக் கூடிய வாய்ப்புக்கள் எல்லாம் இதோ இதோ என்று எதிர்பார்த்துக் காத்துக்கிடக்கும்போது, இந்தப் பேதையர்கள், ஏழையர்கள், அடிமைகளின் கூட்டு நமக்கேன்? செச்சே! வேண்டாம், வேண்டாம்! உதறித் தள்ளிவிடவேண்டியதுதான் எல்லாவற்றையும்! தொண்டாவது, மண்ணுங்கட்டியாவது! நாம், நம்மட்டில் வாழ்கின்ற வழியைப் பார்க்க வேண்டும். நமக்குச் செல்வவான்களிடமிருந்து பாராட்டுக் கிடைக்கின்ற வழியைப் பார்க்கவேண்டும். அந்தக் குப்பத்துப் பெரியவரைச் சும்மா புகழ்ந்து பேசிக்கொண்டு, அவர் செய்கின்ற தொண்டினைப் பாராட்டிக்கொண்டு திரிவதால் நமக்கென்ன நன்மை? ஒன்றுமேயில்லை!- குப்பத்து மக்களின் பாராட்டைத் தவிர, பேசாமல் இந்தப் பேராளன் சொல்வதைக் கேட்பதுதான் அறிவுடைமை. ஆமாம், அப்படித்தான் செய்யவேண்டும்.'

"இப்போதைக்கு நீ எங்களோடு வந்து சேர்ந்துகொள்ளக்கூடவேண்டாம். சும்மா நாங்கள் சொல்வதைச் செய்தால் போதும். நீ பெரியவர் என்று புகழ்ந்தாயே — அந்தக் குப்பத்துக் குடிசையிலிருப்பவனை— அவனைப்பற்றிக் கண்டபடி நீ திட்டிப் பேசினால் போதும். அவன்மீது பழிகளைச் சுமத்தினாற்போதும். 'குப்பத்து மக்களிடம் அவன் நிதி வாங்குகிறான். அந்த நிதியைத் தானே செலவு செய்துகொள்கிறான். இதுவரை அவன் குப்பத்து மக்களுக்கு ஒரு நன்மைகூடச் செய்யவில்லை. அவர்களைக்கொண்டே அவன் வாழ்வு நடத்துகிறான். 'நல்வாழ்வு, நல்வாழ்வு' என்று அவன் பேசித்திரிவதெல்லாம் ஊரை ஏமாற்றுவதற்குத்தான். அந்த நாகரிகம் இல்லாத, நல்ல குடிப்பிறவாத குப்பத்து மக்களோ அறிவு இல்லாதவர்கள்! அவர்கள் அந்தச் சூழ்ச்சிக்காரனின் வலையில் வீழ்ந்து, அவனைப் பெரியவன், பெரியவன் என்று புகழ்ந்து பூசனை புரிந்துகொண்டு திரிகிறார்கள். எல்லாம் வெறும் நாடகம்!' இப்படி ஏதாவது ஒன்றை ஓரொரு சமயத்தில் கூறிக்கொண்டு வந்தால் போதும்'' என்றான் அந்த மாளிகைவாசி.

ஆழமில்லாத சிந்தனையுடைய எட்டய்யன் உடனே மசிந்து கொடுத்துவிட்டான். அவனுடைய சபலபுத்தி அவனுக்கு வழிகாட்டியாக அமைந்துவிட்டது. அப்போதே, அந்தக் கணமே அந்த எட்டய்யன் எட்டப்பனாகிவிட்டான்.

போகும் போக்கிலே அந்த மாளிகைவாசி பின்னும் ஒன்றைச் சொல்லிவிட்டுப்போனான். "நீ மட்டுந்தான் எங்களோடு சேர்ந்துகொள்ளப் போகிறாய் என்று ஊக்கம் குலைந்து நின்றுவிடாதே! உன்னைவிட ஆற்றல்மிகுந்த, நண்பனாகவுள்ள 'குவிசுலிங்' என்பவனும் எங்கள் பக்கம் வந்துவிடுவதாக வாக்குத் தந்துவிட்டான். அஞ்சாதே! 'அச்சங்கொள்வது மடமையடா! நல்லாரைத் தாக்குவது கடமையடா!' என்று திருத்திப்பாடிவிடு! அதற்கு இலக்கியமாக நீயே முதலில் நடந்து காட்டிவிடு! எல்லாம் சரியாகப் போய்விடும்! உன்னுடைய நோக்கமும், எங்கள் நோக்கமும் நிறைவினைக் கண்டுவிடும்! அந்தக் குப்பத்துக் குடிசைப் பெரியவன் இன்னும் சில நாளில் இருக்குமிடம் தெரியாதவனாகிவிடுவான். வெற்றி நமதே!''

எட்டய்யன் இரண்டொரு நாள் குப்பத்திலேயே இருந்துகொண்டு, குப்பத்துப் பெரியவரின் தொண்டினை இழித்துப் பழித்துப் பேசிக்கொண்டு வந்தான். அங்கே அவனை ஆதரிப்பார் யாருமில்லை—அவனுடைய 'குவிசுலிங்' தோழனைத் தவிர, எல்லாரும் அவனுக்கு அறிவுரை புகட்டவும், அவனைத் திருத்தவுமே விரும்பினார்கள். இடையில் அவன் இயற்கையாக ஏற்படும் மன மயக்கத்தோடு, செயற்கையாகத் தன்னைத்தானே உன்மத்தனாக்கிக்கொள்ளும் பயிற்சியிலும் கைவந்தவனாகிவிட்டான். அந்த நிலைகள் எல்லாம் அவனை அவ்விடமிருந்து பிடர் பிடித்து நெட்டித் தள்ளின. இனி அவனால் அங்கிருப்பது கட்டிவராது. பேசாமல் வெளியேறி அந்தப் பெரியவரையும், அவர்தம் அரிய தொண்டையும் சாடவேண்டும். மாளிகைவாசிகள் கூறியதுபோல் பழி பாவத்துக்கு அஞ்சாமல் இகழ்ந்துரையாடவேண்டும். அவனும், அவன் குவிசுலிங் நண்பனும் திட்டமிட்டுத் திட்டமிட்டுப் பல நாடகங்கள் ஆடினார்கள். இரண்டொரு எச்சிற் கலயங்களைச் சேர்த்துக்கொண்டார்கள். திடீரென்று வெளியேறினார்கள். ஆமாம், குப்பத்திலிருந்து மாளிகைப் பக்கம் ஓடிவிட்டார்கள்.

அந்தக் குவிசுலிங்கும், எட்டப்பனும் சேர்ந்து புரிந்த அஞ்சுவது அஞ்சாத செயலைக்கண்டு அந்த மாளிகைவாசிகளே மூக்கின்மீது விரல்வைத்தார்கள்.

அப்பப்பா, அந்தக் குவிசுலிங்கிற்கும், எட்டப்பனுக்கும் எத்துணைக் கோலாகலமான வரவேற்புகள் தெரியுமா? மாலைகள் என்ன, விருந்துகள் என்ன, பாராட்டுகள் என்ன, உபசாரங்கள் என்ன, பணமுடிப்புக்கள் என்ன!—எல்லாம் திரைக்குப் பின்னால்தான்—மாளிகைவாசிகளிடமிருந்து.

அன்றைப் பொழுதே அந்த மாளிகை வட்டாரத்துக்கும், குப்பத்து வட்டாரத்துக்குமிடையே அந்தக் 'குவிசுலிங்' கூட்டம்வந்து நின்றது. மாளிகைவாசிகளும், அவர்தம் அடியாட்களும் அந்தக் 'குவிசுலிங் கூட்டத்திற்கு ஏவலராகக், காவலராக உடன் வந்தார்கள். சூழ்ந்து நின்றார்கள்.

தன்மானம் இழந்து, தன் முனைப்பு என்னும் மேடைமீதேறி ஒருவர் மாற்றியொருவர் பேசினார்கள்.

"ஏ, குப்பத்து மக்களே! உங்களுக்கு நல்வாழ்வு வேண்டுமா? அப்படி வேண்டுமானால் இந்த மாளிகைவாசிகளின் அடிமைகளாக நீங்கள் இருந்துதான் ஆகவேண்டும். உங்களுக்கு வாழ்வளித்துக் காத்துவருபவர்கள் இந்த மாளிகை வாசிகள்தாம். இவர்கள் சாமானியர்கள் அல்லர். பாராட்டவேண்டிய பலபல காரியங்களைச் செய்து முடித்தவர்கள். பெருமை பாராட்டாமல், புகழைத் தேடி ஓடாமல் இவர்கள் கட்டி முடித்திருக்கும் இங்குள்ள ஒவ்வொரு மாளிகையும் இவர்களின் பண்பை எடுத்துச்சொல்லும். அன்பை எடுத்துக்காட்டும்; பெருந்தன்மையை விளக்கி நிற்கும். இப்படிப்பட்டவர்களுடன் சேர்ந்து வாழ்வதுதான் சிறப்பு. இப்படிப்பட்டவர்கள் சொல்வதைக் கேட்டு வாழ்வதுதான் மாண்பு. இவர்களிடமிருந்து துண்டித்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லித் திரிவது பேதைமை, பேதைமை! காரணம், இவர்களிடமிருந்து துண்டித்துக்கொள்வது சாமானியச் செயல் அல்ல, இவர்களோடு ஒட்டாமல் நாம் தனித்து வாழ்வதில் பயன் ஒன்றுமில்லை. இந்த மாளிகையின் நிழல் அருமையான நிழல். இங்குள்ளசோலைகளில் தவழ்கின்ற மென்காற்று, தென்றலினும் இனிமை நிறைந்த மெல்லிய பூங்காற்று. இங்கே நின்று பார்க்க வேண்டும், உலவிப்பார்க்க வேண்

டும். எல்லாவற்றையும் துய்த்துப் பார்க்கவேண்டும் என்றே எண்ணுதல் வேண்டாம்! தொலைவில் நின்று சும்மா வேடிக்கை பார்த்தாலே நம் உள்ளமெல்லாம் நிறைந்துவிடும். அந்த வேடிக்கை பார்க்கும் வாய்ப்பு ஒன்றே குப்பத்தில் வாழும் உங்களுக்கெல்லாம் போதும்.

"ஆகவே, அன்புள்ள குப்பத்து மக்களே! உங்களோடு இருக்கும் அந்தப் பெரியவன் என்பானின் பேச்சைக் கேட்காதீர்கள்! அவன் சொல்வது உண்மையல்ல. உங்கள் வாழ்வைக் குலைக்க எண்ணுகிருன் அவன். உங்களிடமிருந்து சுரண்டி வாழ்ந்துகொண்டிருக்கிருன் அவன். மொத்தத்தில் அவன் மூத்தவனே அல்லன். அற்பன்; மிக மிகச் சாமானியன்.

"ஆகவே, ஓடி வாருங்கள். எங்களோடு வந்து சேர்ந்துவிடுங்கள். நாம் எல்லாம் ஒன்ருகக்கூடி இந்த மாளிகை வாசிகளுக்குப் பட்டயம் எழுதிக் கொடுத்துவிடலாம். 'இனி ஒருகாலும் மாளிகை வாசிகளுக்கு எதிராக நாங்கள் எந்தவொரு செயலும் புரியமாட்டோம். என்றென்றும் மாளிகைக்குக் காவலாக இருப்போம். மாளிகை வாசிகள் ஏவுகின்ற முறையில் எல்லாம் தொழும்பு செய்வோம்! எங்கள் குப்பம் என்றென்றும் இப்போது இழிப்பதுபோன்றே இருப்பதற்கு ஒப்புக் கொள்கிருேம்!" என்று அழியாப் பட்டயம் எழுதிக் கொடுப்போம்! வாரீர்!"

அந்தக் கயவர்களின் பேச்சு, குப்பத்து மக்களை வயிறெரியச் செய்தது. "பாவிகளா! இன்று காலை வரை அந்த மாளிகை வாசிகள் இந்தக் குப்பத்து மக்களுக்கு இழைக்கின்ற இன்னல்களைப்பற்றிப் பேசினீர்கள்! கொடியவர்களான அவர்கள் இவ்வளவு விரைவிலா மிகமிக நல்லவர்களாக மாறிவிட்டார்கள்? என்ன சூது இது! சூழ்ச்சி வலையில்—உங்கள் அழுக்காறு, மேட்டிமை, பேராசை முன்னிலையாக—நீங்கள் சிக்கியது போதாது என்று எங்களையுமல்லவா அழைக்கிறீர்கள்! எவ்வளவு திமிர் உங்களுக்கு!" என்று அவர்கள் மனம் பொருமி உரக்கக் கத்தினார்கள்.

குப்பத்து மக்கள் உரக்கப் பேசினார்களோ இல்லையோ! உடனே மாளிகை வாசிகளின் திருக்கூட்டத்தோடு ஒட்டி நின்ற எட்டப்பன் சத்தம் போடத் தொடங்கினுன்.

"ஐயயோ! எங்களைத் தாக்குகின்ருர்களே குப்பத்து மக்கள்! ஐயயோ, இவர்களை ஏவிவிட்டு அங்குள்ள பெரிய மனிதன் என்பவன் புன்னகையும், பெருநகையும் புரிந்துகொண்டு நிற்கின்ருனே! ஏ, மாளிகையில் வாழ்கின்ற நாகரிக மக்களே, நல்லகுடிப் பிறந்தவர்களே! உங்களிடமிருந்தெல்லாம் நாங்கள் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிருேம்! இதுவரை நாங்கள் அந்த நாகரிகம் இல்லாத, நல்லகுடிப் பிறவாத காட்டுமிராண்டிகளாம் குப்பத்து மக்களோடு வாழ்ந்து வந்தமைக்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்கிருேம்! இதுவரை அந்த குப்பத்து 'மூத்தவனை' மூத்தவர் என்று சொன்னதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்கிருேம்!

"ஐயயோ, ஐயயோ! அதோ, அதோ அந்தக் குப்பத்து மூத்தவனே தடியைச் சுழற்றிக்கொண்டு எங்களை அடிக்க ஓடி வருகின்ருனே! பாருங்கள், பாருங்கள்! மக்களே இவன் வன்முறையைப் பாருங்கள்! மக்களே, வன்முறையால் தங்கள் காரியத்தை முடிக்க நினைக்கும் இவர்களை நம்பாதீர்கள்! இவர்களுக்கு ஆதரவு காட்டாதீர்கள்! இன்றைக்குத் தடி, நாளைக்குத் துப்பாக்கி, மறுநாள் வெடிகுண்டை வீசுவார்கள்! ஐயயோ மோசம் போய்விட்டோம்!"

குப்பத்து மக்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்! யார் தடியைச் சுழற்றியது? யார் கல்லெறிந்தது? யாரிடம் துப்பாக்கியிருக்கிறது? துப்பாக்கியையும், வெடிகுண்டையும் அவர்கள் கண்டதே கிடையாதே!

ஓடினுர்கள் அவர்கள் குப்பத்துப் பெரியவரிடம்.

'பழி சுமத்துவதையே, தூற்றுவதையே தங்கள் வேலைத் திட்டமாக அமைத்துக்கொண்டவர்களிடம் வேறு எதை நீங்கள் எதிர்பார்க்க முடியும்? அவர்கள் தூற்றட்டும்; பழி சுமத்தட்டும். அந்த அருந்தொண்டை அவர்கள் செய்துகொண்டேயிருக்கட்டும்" என்று குப்பத்துப் பெரியவர் தம்மைச் சூழ்ந்து நின்ருரிடம் கூறிக்கொண்டிருந்தார். மேலும் அவர் சொன்னுர்:

"நாம் கொண்டுள்ள கொள்கை தூய்மை நிறைந்தது. உண்மையும், நேர்மையுமே அந்தக் கொள்கையின் வளர்ச்சிக்கான வித்துக்கள். நாம் செய்வது ஆக்கப்பணி. நம்முடைய வேலை ஆற்றிக்கொண்டே போவது. சிறப்பு வாய்ந்த எந்தவொரு குறிக்கோளும், எந்தவொரு ஆக்கப்பணியும் அதன் வெற்றி வாயிலின் இறுதி நிலைவரை எதிர்ப்புக்களைத் தாங்கிக்கொண்டு, ஏசல்களைத் தாண்டிக்கொண்டுதான் முன்னேறிச்செல்லவேண்டுமென்பது உலக நியதி; வரலாறு நமக்குக் கற்பிக்கும் சிறந்த பாடம். உண்மையளவில் ஒரு குறிக்கோள் சிறந்தது, பேராக்கம் நிறைந்தது என்று அறுதியிட்டு அளந்து பார்ப்பதற்கு உதவக்கூடிய அளவைக் கருவியே அதன் எதிர்ப்பாற்றல்கள்தாம். பாலின் சுவையைப் பெருக்கிக் காட்ட அதனை அடுதல் வேண்டும். பொன்னின் தரத்தை உயர்த்திக் காட்ட அதனை உருக்குதல் வேண்டும். அவ்வாறுதான் சிறந்ததொரு குறிக்கோளும். நம்மை எதிர்ப்போர், நம்மை இழித்துப் பழித்துப் பேசுவோர் உண்மையில் நமக்கு ஊறு செய்யவில்லை. அவர்கள் எதிரிகளாக நின்று நம் குறிக்கோளின் சிறப்பையும், தூய்மையையும், உண்மையையும், நேர்மையையும் எடுத்துக் காட்டவே உதவுகின்றனர்.

"ஆகவே, தூற்றுவார் தூற்றிக்கொண்டே திரியட்டும். அதைப் பார்த்துக்கொண்டிருக்க ஓய்வு இல்லை நமக்கு. நாம் நம் அரும்பணி ஆற்றிக்கொண்டே போவோம்!

"என்னைப்பற்றி அவர்கள் இழித்துப் பழித்துப் பேசுகின்ருர்கள் என்று நீங்கள் வருந்துகிறீர்கள். நான் தடியைச் சுழற்றிக்கொண்டு அவர்களைத் தாக்கப் போனேன் என்ருல், அறிவாராய்ச்சியுள்ள யாரும் அதை நம்புவார்களா? நான் உங்களை ஏவி அவர்கள்மீது கல்லையும், மண்ணையும் வாரி இறைக்கச் சொன்னேன் என்று அவர்கள் சொன்னுல், இதுவரை நாம் ஆற்றி வந்துள்ள செயல்களையும், அவற்றிற்காக நாம் கொடுத்துள்ள களபலிகளையும்,—அடைந்துள்ள இன்னல்களையும் அறிந்திருப்பார் ஒப்புக் கொள்வார்களா?

"ஒளியைவிட இருளையே விரும்பும் ஒருவன் நிலவு பொழியும் குளிர் இரவொன்றில், வெட்ட வெளியில்

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

மல்லாந்து படுத்தவண்ணம் வெண்ணிலவை நோக்குகிறான். அந்தத் தண்ணிய வெண்ணிலவைக் கண்டு அவனுக்கு எரிச்சல் எரிச்சலாக வருகிறது. உடனே அவன், தன்னை மறந்த நிலையில், அந்த வெண்ணிலவின்மீது உமிழ்வதாக எண்ணிக்கொண்டு காறி உமிழ்கிறான். அவன் உமிழ்ந்த எச்சில் அவன்மீதே திரும்பிவந்து வீழ்கிறது' அவன் திடுக்குற்றுக் கத்துகிறான், 'ஐயயோ, ஐயயோ! வெண்ணிலவு என்மீது எச்சிலைக் காறி உமிழ்ந்துவிட்டதே! இது அடுக்குமா? இது நியாயமா? இதுவும் வெண்ணிலவா? இதனிடம் தன்மை உள்ளதா? மக்களே, மக்களே! நாகரிக மக்களே, நற்குடிப்பிறந்த மக்களே, இதுவரை என்னுடைய பேதைப் புத்தியால் இந்த விண்மதியை வெண்ணிலவுஎன்று வாழ்த்திப்பாடிவிட்டேன். எங்கோஇருந்த அதனைப் பிடித்துவந்து வானத்தின் உச்சியிலே நிறுத்திவைத்துவிட்டேன். இந்தத் தவறுக்காக நீங்கள் எல்லாரும் என்னை மன்னிக்கவேண்டும். அதோடுகூட இந்த வெண்ணிலாவை வெண்ணிலா என்று அழைக்காதீர்கள் இனி! இது வீண்மதி,—விண்மதி அல்ல. இனி இந்த நாளை அமாவாசை என்றே நான் அழைக்க விரும்புகிறேன். நீங்களும் அவ்வாறே அழையுங்கள். இனி இந்த நாள் முழுநிலா நாளே அல்ல.' என்றுஅவன் சொன்னால், உண்மையான நாகரிக மக்கள் பேதையன் அவன் என்று வாளா போவார்கள். மற்றவர்கள் ஆராய்ச்சிஅறிவின்மையாலோ, உண்மையை உணர்ந்து பார்க்கும் தன்மை இன்மையாலோ—அல்லது அந்தப் பேதையன் கூற்றை ஒப்புவிப்பதன் மூலம் தங்கள் சொந்தநன்மையைப் பெருக்கிக்கொள்வதற்கு வாய்ப்பு இருப்பதாலோ 'ஆமாம், ஆமாம். அவன் சொல்வது அத்துணையும் உண்மை. அதோ உச்சியில் தென்படுவது விண்மதியல்ல; வீண்மதிதான். இன்று நிலா நாள் அல்ல; அமாவாசை நாள்தான்' என்று உலகெங்கும் பறைசாற்றத் தொடங்குவார்கள். தொண்டை வறள, வறள முழங்கிக்கொண்டே திரிவார்கள்.

"ஒருவன் சொல்லிவிட்டான் என்பதற்காக விண்மதி வீண்மதியாகிவிடுமா? அதற்கு யாரேனும் அச்சமோ, கவலையோ கொள்வது உண்டா? அவ்வாறுதான் எதிரிகள் எனப்படுவோரின் செயலும். அவர்கள் எதிர்ப்பு நம் மதிப்பை உயர்த்தவே உதவும். அவர்கள் தூற்றல் நம் ஆற்றலைப் பெருக்கவே துணை வரும். அதோடு அவற்றைப்பற்றியெல்லாம் எண்ணவோ, வருந்தவோ நமக்கு நேரமில்லை. வேலையிருக்கிறது நிரம்ப.

"இதோ இந்தக் குப்பத்தின் சாக்கடை நாற்றத்தை மாய்க்கவேண்டும். அதற்குப் போக்கிடம் காட்ட வாய்க்கால் தோண்டவேண்டும். இங்குள்ள நூற்றுக்கணக்கான குடிசைகள் எல்லாம் கூரையிருந்தால் சுவர் இல்லாமலும், சுவர் இருந்தால் கூரையில்லாமலுமே சிதைந்து கிடக்கின்றன. அவற்றையெல்லாம் நாம் செப்பம் செய்யவேண்டும். இங்கு பன்றிகளும், மனிதரும் ஒன்றாக உறைகின்றனர். இந்த நிலையைப் போக்கவேண்டும். மாற்றவேண்டும். இங்குள்ளோரில் யாருமே சோம்பலுள்ளோர் அல்லர். என்றாலும் ஒரு வேளை கூழுணவு கிடைத்தால், மறுவேளை அது கிடைக்கப்பெறாத நிலையிலேயே உழன்றுகொண்டு கிடக்கின்றனர். அவர்கள் உழைக்கின்றார்கள். அந்த உழைப்புக்குச் சரியான ஊதியம் கிட்டுவதில்லை. அவர்கள்உழைப்பையெல்லாம் வாரிச் சுருட்டிக்கொண்டு போகிறார்கள் அதோ இருக்கும் மாளிகைக்குச் சொந்தக்காரர்கள். ஏன் அவர்கள் சுருட்டிக்கொண்டு போகிறார்கள் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். நாம் இன்று அவர்களின் அடிமைகள். அதனால் அவர்கள் வைத்ததே சட்டம். அவர்கள் பேசுவதே நீதி. அந்த நிலையிலிருந்து நாம் மீளவேண்டும். அவர்களிடமிருந்து நாம் விடுபடவேண்டும். அந்த விடுதலையின் மூலமே இங்குள்ளோரின் துயரம் போக்க முடியும். துன்பம் அகற்ற முடியும். அந்தக் குறிக்கோள் நோக்கி நாம் செல்லவேண்டும். அதனால், நமக்கு வேலையிருக்கிறது நிரம்ப.

"மாற்றார் நம்மீது பழுதையைத் தூக்கிப்போட்டுவிட்டு பாம்பென்று சொல்லிக் களித்துக் கிடக்கட்டும் அவர்கள் மடமையே அவர்களைச் சாடட்டும். நமக்கில்லை அந்தவேலை. நாகரிகத்தைப்பார்த்து அநாகரிகம் 'அநாகரிகம்' என்று சொல்வதால், நாரிகம் அநாகரிகம் ஆகப்போவதில்லை. கேட்பார் சிரிப்பார்கள். நாகரிகர் யார் என்று உலகுக்கு நாம் உணர்த்தவேண்டா. காலப்போக்கில் உலகு அதனைத்,தானேதெரிந்து கொள்ளும்; தெளிந்துகொள்ளும்.

"நம் அக்கறையெல்லாம் இன்று நாம் எய்தவேண்டிய குறிக்கோளைப் பற்றியேதான். ஆற்றவேண்டிய கடமைகளைப்பற்றியேதான். அவற்றில் நம் உள்ளம் படிந்து, பதிந்து. குவிந்துகிடக்கட்டும். வேலை இருக்கிறது நிரம்ப.

"ஆடிமுடிப்பேன் என்றவர்கள் ஆடாமல் இடையில் விட்டுவிட்டு வேறு மயக்கத்தில் வீழ்ந்து மாய்ந்துபடலாம். பாடி முடிப்பேன் என்றவர்கள் பாட்டைப் பாதியில் மாற்றிக்கொள்ளலாம். அல்லது ஆடவுந் தெரியாமல், பாடவும் முடியாமல் ஓடி முடிப்பதே பெரிதென எண்ணி அவ்வாறே இயற்றி முடிக்கலாம். நாம், ஆடி முடிப்போம், பாடி முடிப்போம் என்று பார்மெச்ச ஊரறியப் பேசிவிட்டு ஓடி முடிக்கும் நிலையினர் அல்லர். ஆற்றவேண்டியோர் நாம்! ஆகவே நமக்கு வேலை இருக்கிறது நிரம்ப.''

★

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.